# திராவிடநாடு

8—5—58 | வார வெளியீடு | விலை 16காசு


## திராவிடநாடு

**[ பி. கே. வேலன் ]**

திராவிட நாடெனும் போதினிலே—பகுத்தறிவுத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
அன்னையர் நாடென்ற எண்ணத்திலே—ஒரு
அன்பு பிறக்குது இதயத்திலே.

தண்புனல்காவிரி பெண்ணை நதியும்—நம்
தங்கத் திருநாட்டின் செல்வமாகும்—பொன்
நெல்அளிக்கும் வைகை பொருநையும்—நம்
பூந்திரு நாட்டின் வளமாகும்.

கன்னடம் ஆந்திரம் கவின்மலையாளமும்—கன்னித்
தமிழ் நாட்டின் கிளைநாடே—இன்று
தரணியில் ஒலிக்கும் திராவிடநாடு—நம்
சங்ககாலத் தமிழ் நாடே.

கலைகள் நிறைந்த திருநாடு—புகழ்
கவிஞர்கள் பிறந்த பெருநாடு—நல்ல
பகுத்தறிவு நூல்கள்பல உலவி—மணம்
பாரெங்கும் வீசும் திராவிடநாடு.

குறளையும் சிலம்பையும் குவலயத்திற்கே—தந்து
குன்றாப் புகழ்கொண்ட திருநாடு—நெஞ்சை
அள்ளும் அறிவு மலர்களென்—றோர்மறை
ஆரம் படைத்த திராவிடநாடு.

வாழ்க திராவிடநாடு! வாழ்க திராவிடநாடு!
வாழ்க! வாழ்க! வாழ்கவே!
எங்கும் புகழ்பெற்ற எங்கள் திராவிடநாடு!
என்றென்றும் வாழ்கவே!!

# தேனில் தோய்த்த பலா!

**(அரங்கண்ணல்)**

விழிகளே போதும் வீரர்களை வீழ்த்த! அவைகளுக்கு மையும் தீட்டப்பட்டு விட்டால்? அலைகளை வம்புக்கு இழுக்கும் அழகிய கூந்தலுடன் முல்லைச் சரமும் சேர்ந்தால்? முத்தாரம் விளங்கும் கழுத்தில் மோகன வைரமாலையும் தொங்கும்படி செய்தால்? தொட்டால் மணக்கும் தேகத்துக்கு சந்தனத்தையும் குழைத்துப் பூசினால்? பாலோடு சர்க்கரையும் கலந்தால்? பலாச் சுளையோடு தேனையும் சேர்த்தால்? அது போலாயிற்று, இயற்கை அன்னை தொட்டில் போட்டுத் தூங்கும் நன்செய் நாடாம் தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்ற மாநாட்டு வரவேற்புக் குழுவுக்கு **கருணாநிதியும்** போய்ச் சேர்ந்தது. அதிராம்பட்டினம் **இளங்கோ, மன்னார்குடி நாராயணசாமி —கிருட்டிணமூர்த்தி,** பேராவூரணி **அடைக்கலம்,** கொரடாச்சேரி **நடராசன், ஆரூர் நாகப்பன்,** எனும் ஆர்வமிக்க தோழர்களுடன் கருணாநிதியும் போய்ச் சேர்ந்து கொண்டார் என்றால், மாநாட்டின் எழிலும் சிறப்பும் எப்படியிருந்தது என்று உரைத்திடவுமா வேண்டும்?

"கண்களை உயர்த்திப் பார்க்கிறேன்! **கனிகள், காட்சியளிக்கின்றன**—பலாப் பழம் தொங்குகிறது, வாழைத் தார்களின் வரிசையும், பனங் குலையும், ஈச்சம் பழக் கொத்துக்களும் என்னைக் கவருகின்றன. அவைகளிலிருந்து கண்ணைக் கொஞ்சம் தாழ்த்தினாலோ, **கனிந்த முகங்களைப் பல்லாயிரக் கணக்கில் காண்கிறேன்.** வீரர்களாகிய நீங்கள், அகமும் புறமும் மலர, இருக்கிறீர்கள் மாநாட்டில். இந்தப் பெறற்கரிய காட்சியினும் பிறிதொன்றுண்டோ?", என்றார் **அண்ணா,** பேசும்போது.

கலையும், தமிழும், தூங்குமிடம் என்பர் தஞ்சைக் கோட்டத்தை! விதைக்கும் நெல், வீணாகாது, கதிராக மாறும் கழனிகள் நிரம்பிய மாவட்டம் அது; இதென்ன அதிசயம்? விதை போட்டால் எங்கும் தான் கதிர் கிடைக்கும் எனக் கூறக்கூடும். கதிர் எங்கும் கிடைக்கும்; ஆனால் தஞ்சை மாநிலத்தில் விளையும் நெல்மணிகளுக்குத் தனித்ததோர் அழகுண்டு; நெல் மணிகளை, அரிசியாக்கி, அதனை விருந்தினருக்குப் படைத்திடும் முறையிலும் கலைநயத்தைக் காணலாம். நட்சத்திரங்கள் ஆயிரம் உண்டெனினும் விடிவெள்ளியில் ஒரு அழகு இருக்கத்தானே செய்கிறது! அந்தப் பாங்கும், பண்பும் மாநாட்டின் ஒவ்வொரு செயலிலும் மிளிர்ந்தது; போட்டிருந்த கொட்டகை, அப்பப்ப; முதல் முதலாக நாம் நடத்தினோமே மாநில மாநாடு, அதனை நினைப்பூட்டிற்று. ஓமான் கடலுக்கு இரையான **பன்னீர்ச் செல்வத்தின்** பெயரால் அமைந்திருந்த அப்பந்தலின் முகப்போ, அபாரம்! அபாரம்!! ஒளியுமிழும் வகையில் அமைந்திருந்த அந்த முகப்பின் அழகை, இரயிலில் வந்தபோது நானும் "காஞ்சிச் செய்தி" ஆசிரியர் **பூஞ்சோலையும்** கண்டோம்—ஆகா, தாஜ்மகால், தோற்றது—கலையூர் வென்றது. அம்முகப்பைத் தாண்டி உள்ளே நுழைந்தால், வாயில்! அதுவும், உயர்ந்த வேலைப்பாடுகளுடன் அமைந்திருந்தது!! முகப்புக்கும் வாயிலுக்குமிடையே, பரந்து கிடந்த இடைவெளியையும் சும்மாவா விட்டார்கள்? ஈச்சமரத்தையும் வாழை மரங்களையும் பெயர்த்தெடுத்து வந்து, அழகுற அமைத்திருந்தார்கள்! அவைகளின் மத்தியில் நீண்டதோர் கம்பத்தில், இருவர்ணக் கொடியைப் பறக்கவிட்டிருந்தார்கள்!! அந்தக் கொடிக் கம்பத்தைப்பூமியில்வைக்க மட்டும் 50 ஆட்கள் தேவைப்பட்டார்களாம்.

இதென்ன, இதுவும் ஒரு மாநாட்டுப பந்தலோ என்று கேட்குமளவில் ஒரு கொட்டகை யிருந்தது—விசாரித்தபோது, உணவுவிடுதி என்றார்கள்! உணவுப்பொட்டலக்கடை, தேநீர் கடை, சிற்றுண்டிக் கடை, சோடாக் கடைகள், நூல் அரங்கு, என்று இவ்விதம் பல கடைகள், சைக்கிள்களை நிறுத்துவதற்காக ஒரு பரந்த மைதானம்—அது முழுதும் ஈருருளிகளாகவே இருந்தன—கார்கள் நிற்கவும் தனி இடம் ஏற்பாடு செய்திருந்தார்கள்!! புற அழகை இரசித்துவிட்டுக்கொட்டகைக்குள் நுழைந்தாலோ, அண்ணா வர்ணித்ததுபோல, எங்கும் எதிலும் அழகு மிளிர்ந்தது. மேடையின் அலங்காரம், கண்ணைப் பறித்தது—மேடைக்கு இட்டிருந்த, **"அழகிரி அரங்கு"** எனும் பெயரோ, இதயத்தை எங்கோ இழுத்துச் சென்று, மறைந்த அம்மாவீரர் போன்றோர் நம் முன்னோர்களன்றோ எனும் நினைவைக் கிளறியது.

அழகு மிளிரக் காரணம் டாக்டர் **விசயராகவன், சதாசிவம்;** பந்தல் இவ்வளவு சிறப்பாக இருக்க 'அத்தான்' **வெங்கட்டராமனைத்** தான் சொல்லவேண்டும்; மேடையழகு மிளிர்ந்தது வெங்கிடங்கால் சேனிராஜால்; முகப்பு வேலையின் பெருமை **குத்தாலம்** தோழர்களைச் சாரும்; வாயிலின் அழகு **மாயவரம்** தோழர்களின் கைவண்ணம்; வண்ண ஓவியங்களின் பெருமை மாயவரம் **பி. டி. ராஜனையும்,** அறந்தாங்கி **கருணாவையும்,** ஆரூர் **வீரையாவையும்** சேரும். அனைத்தையும்கூட இருந்து கவனித்து, ஆட்களைத் தந்து, ஓடியாடி உழைத்தவர்கள் வெங்கிடங்கால் **சந்தானமும், வாழக்கரை இராசகோபாலும்!** அதோ, 'காரில்' பறந்த வண்ணம் உள்ளாரே **தென்னன்,** அவர்தான் கேட்டதை யெல்லாம் கொண்டுவந்து கொடுத்துக் கொண்டிருந்தவர்! ஏணியில் நின்றபடி எதையோ கட்டிக் கொண்டிருக்கும் அத்தோழன் பெயர் **ஜயராமன்,** ஆர்வக் காளை. **ஜமால்** என்பவரைத தெரியுமா? கலா ரசிகர்! கழக மணம் பரவ வேண்டுமென்பதில் ஆர்வமிக்க

(4-ம் பக்கம் பார்க்க)

# நல்ல பாடம்!

ர் 16]  ஆண்டு சந்தா ரூ. 8  [18-5-58]  தனிப் பிரதி 16-காசு  [இதழ் 44

கடந்த சில நாட்களாக டில்லியில் நடைபெற்ற காங்கிரசுக் காரியக் கமிட்டிக் கூட்ட நிகழ்ச்சிகள், நாட்டுக்கும், நாட்டில் உள்ள வேறு பல கட்சிகளுக்கும் ஒருநல்லபாடம் கற்பிப்பதாக அமைந்துள்ளது. அதிலும் நாட்டு நலனில் அக்கறைகொண்ட ஒரு கட்சி தனது செல்வாக்கின் மூலம் நாட்டை ஆளும் பொறுப்புக்கு வருமானால், அது எப்படியெப்படி எல்லாம் தன் இஷ்டம்போல் நடந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்று விடுகிறதென்பதை இக்கமிட்டிக் கூட்டம் நன்கு தெளிவாக்கியுள்ளது.

கட்சித் தலைவரிலிருந்து சாதாரண தொண்டர் வரை அவரவர்களும் தத்தமக்குள்ள செல்வாக்கை வாய்ப்பாக்கிக் கொண்டு நாட்டின் நல்வாழ்வுக்கு ஊறு எப்படியெல்லாம் தேடுகிறார்கள் என்பது அக்கமிட்டியின் நடவடிக்கைகளின் வாயிலாக எதிரொலித்திருக்கிறது.

காங்கிரசின் ஆணி வேராக அமைந்துள்ள பண்டித நேரு அவர்களே வேதனைக் கடலில் மூழ்கி, அதிலிருந்து மீள வழி தேடியிருக்கிறார் என்றால், தமது கட்சிக்குள்ளே நிலவிக் கிடக்கும் ஊழல்களைக் கண்டு உளம் வெதும்பியிருகிறார் என்றால், அக் கட்சி எந்த அளவுக்கு சுயநலக் கோட்டையாக மாறியிருக்கிறதென்பதைச் சொல்லத் தேவையில்லை.

பதவிப் பொறுப்பில் இருந்து விலகப்போகிறேன் என்று பயம்காட்டி மிரட்டுமளவுக்கு அவர் சென்றிருக்கிறார் என்றால், காங்கிரசின் பெயரால் எவ்வளவு தகாத காரியங்கள் நடைபெறுகின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது.

காங்கிரசுக் காரியக்கமிட்டிக் கூட்டத்தில் கீழ்க் குறிப்பிடும் கருத்துக்களும் குற்றச்சாட்டுகளும் பரவலாக எடுத்துக் காட்டப்பட்டதாகத் தெரிகிறது:—

காங்கிரசில் உள்ளவர்களுக்கே சோஷலிசக் கொள்கை சரியாகத் தெரியவில்லை.

தொழில் துறை உள்பட தேசப்பொருளாதாரத்தின் எல்லாவற்றையும் அதிகாரத்திலுள்ளவர்கள் தங்கள் வசப்படுத்திக்கொண்டு இஷ்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்கிறார்கள்.

இலட்சியத்தையும் அதை அடையும் வழியையும் பற்றிக் காங்கிரசுக்காரர்களிடையே தெளிவில்லை.

காங்கிரசுக்குள் விரும்பத்தகாத பலர் புகுந்துவிட்டார்கள்.

தனியாக எந்தக்கட்சியிலும் சேராதிருந்த வகுப்புவாதிகள்பலர் காங்கிரசில் இடம்பெற்று விட்டார்கள்.

இவர்கள் தங்கள் சுயநலத்துக்காகக் காங்கிரசைச் சிறிதும் கூசாமல் பயன்படுத்தி வருகிறார்கள்.

காங்கிரசின் பெயரால் சிலர் சட்ட சபைகளிலும் இடம் பெற்றுவிட்டார்கள்.

வேறுவகையான சுயநலமிகள் பலரும் காங்கிரசில் புகுந்து விட்டார்கள்.

இதனால், காங்கிரசில் கட்டுப்பாடு தளர்ந்து ஊழல்கள் மலிந்துவிட்டன.

காங்கிரசின்பால் மக்கள் வைத்திருந்த மதிப்புக் குன்றிவிட்டது.

ஒவ்வொரு காங்கிரஸ் வாதியும் தன் இஷ்டம்போல் நடக்க ஆரம்பித்து விட்டார்கள்.

பதவி மோகம் தலைவிரித்தாடுகிறது.

ஒவ்வொரு ஊரிலுமுள்ள காங்கிரசுக்காரர்கள் தங்கள் இஷ்டம்போல் — தங்கள் சுயநலத்தையே அடிப்படையாக வைத்து தகுதியற்றவர்களையும், விரும்பத்தகாதவர்களையும் காங்கிரசில் சேர்த்துவிடுகிறார்கள்.

இவையும் இவைபோன்ற இன்னும் பல கருத்துக்களும் குற்றச்சாட்டுகளும் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் எடுத்துப் பேசப்பட்டதாகத் தெரிகிறது.

பத்திரிகைகள் தரும் செய்திகளைக்கொண்டு இந்த அளவு தெரிந்து கொள்ள முடிகின்றபோது, பத்திரிகைகளில் வெளியிட முடியாத--அனுமதிக்கப் படாத இன்னும் எவ்வளவோ பிரச்சினைகள் அங்கு எழுப்பப்பட்டிருக்கலாம். ஏனென்றால், பண்டித நேருவுக்கு உண்டான வேதனையையும் விரக்தியையும் எண்ணிப் பார்க்கும்போது இந்தக் காரியக் கமிட்டிக் கூட்டம் காங்கிரசுக்கட்சிக்கு ஒரு சோதனையாக அமைந்திருந்ததென்றே சொல்ல வேண்டும்.

எனவே, ஒரு கட்சி ஆளும் பொறுப்புக்கு வந்து விட்டால், அதன் போக்கும் நோக்கும்எப்படியெப்படியெல்லாம் மாறிவிடுகிறதென்பதை விளக்கும் ஒரு நல்ல வாய்ப்பை இந்தக் கமிட்டிக் கூட்டம் ஏற்படுத்தியிருக்கிறதென்பதை எடுத்துக் காட்டி, இதன் வாயிலாக மற்றக் கட்சிக்கள், அதாவது நாட்டின் செல்வாக்கைப் பெற்றுள்ள கட்சிகள் எவ்வளவு எச்சரிக்கையாகத் தம்மையும் தம் கட்சியையும் கட்டிக் காத்துக்கொள்ள வேண்டுமென்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியவர்களாகிறோம். ❋

2-ம் பக்கத் தொடர்ச்சி

வர் — பல வழிகளிலும் ஒத்துழைப்பு தந்தார்! சேதுபதிதான், மாநாட்டின் தண்ணீர் இலாகாத் தலைவர் — என்று, ஒவ்வொருவரின் ஒத்துழைப்பைப் பற்றியும் கருணாநிதியும், இளங்கோவும் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தனர்.

மாநாட்டுக் கொட்டகை மட்டுமல்ல, திருவாரூருக்குள் எம்பக்கம் திரும்பினும் இருவண்ணக் கொடிகளும், ஒரு ஆயிரத்துக்கு மேற்பட்ட வரவேற்பு வளைவுகளும் காட்சியளித்தன. ஒவ்வொரு வளைவிலும், கருணாநிதியின் 'தமிழ்' இருந்தது. இத்தனையையும் இரண்டே இரவில் கட்டி முடித்தவர், இவர்தான் — இவர் பெயர் டாக்டர் தண்டபாணி என்றார்கள்! "அவரைப் பார்த்தால் நோயாளி போல் இருக்கிறாரே", என்றேன். ஆறு நாட்களாயிற்று, கண்களை மூடி, அதனால்தான்!—என்றார், அவர். "அவர் மட்டுமா? நாங்கள் எல்லோருந்தான் ஆறு நாட்களுக்கு மேலாயிற்று, கண்மூடி", என்றனர் கருணாநிதியின் அருகில் நின்ற மாயவரம் கருணானந்தமும் முல்லைசத்தியும்!!

"தவறு சகோதர! மாநாட்டுக்காக இவர்கள் மட்டுமே, இந்த ஆறு நாட்களும் கண்மூடாமலிருந்ததாக எண்ணிக் கொள்ளாதீர்கள். தஞ்சை மாவட்டமே, பல நாட்களாகக் கண்மூடவில்லை. மாநாட்டின் பெருமைக்குக் காரணம், இவர்கள் மட்டுமல்ல, ஒவ்வொரு ஊரிலும் உள்ள ஏராளமான தோழர்கள்தான்; அவர்கள் அத்தனைபேரது பெயர்களையும்; சொல்லவும் எழுதவும் நேரம் போதாது. ஊர்வலத்தைப் பார்த்தீர்களல்லவா, நேற்று?" என்றார் கருணாநிதி.

ஊர்வலங்கள், பல இடங்களில், பலவிதங்களில் கண்டிருக்கிறோம் இதுவரை! கழகமிருக்கும் ஊரின் பெயரினைப் பொறித்த கொடிகளுடன், பல்லாயிரக் கணக்கில் தோழர்கள் கலந்துகொள்வார்கள், ஊர்வலங்களில். ஆனால், தஞ்சை மாவட்ட மாநாட்டிலோ இது மட்டுமல்ல; இன்னொரு காட்சியையும் கண்டோம். வளமும் வகையுமட்டும் கிடைத்தால், இதென்ன, கடல்மேவும் கப்பல் செய்வோம் — வானத்தை வட்டமிடும் விமானம் கட்டுவோம்— கனகவிசயன் தலையில் அன்றோர் நாள் கல்சுமக்கவைத்த சேரன் செங்குட்டுவனின் புகழை நாட்டுவோம் — வெற்றித் தேரில் ஏறிப் பவனி வருவோம் என்பதை எடுத்துக் காட்டுவதுபோல, ஆகாய விமானம்போல் ஒரு கழகமும், கடலில் மிதந்திடும் கப்பலைப் போல் இன்னொரு கழகமும், கனக விசயன் கல்சுமந்து செல்லவும் தேர் ஏறி மூவேந்தரும் வருவது போல் வேறொரு கழகத்தவரும், முத்துப் பல்லக்கு ஒன்றும், இப்படி விதவிதமாக அழகூட்டும் விதங்களில் பல செய்திருந்தார்கள்! குதிரைகள் பூட்டிய வண்டியில் மாநாட்டுத் தலைவர், கே. ஏ. மதியழகனும், திறப்பாளர் ப. உ. சண்முகம் எம். எல். ஏ-யும், கழகக் காவலர்கள் நாவலர் நெடுஞ்செழியனும், என். வி. நடராசனும், மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் என். எஸ். இளங்கோவும், பொருளாளர் கலைஞர் மு. கருணாநிதியும் அமர்ந்து வந்தனர். அவர்கட்கு, நகரமுழுமையும் மலர்மாலைகள் சூட்டினர்! மக்கள் எல்லாம் விழாப்போல் கொண்டாடிய காட்சி, ஆரூரின் வரலாற்றிலேயே ஒரு புதுமையாக இருந்தது!!

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆரூர் கழகச் செயலாளர் நாகப்பன், நல்லதோர் காரியம் செய்தார். பொதுச் செயலாளரைக் கொண்டு, கழகக் கட்டிடத்துக்குக் கல் நாட்டியதுதான், அது. வெள்ளியால் செய்த கொல்லறு கொண்டு, நாவலர், கால்கோல் விழாச் செய்தார்! 2000 ரூபாய்க்கு மேற்பட்ட அந்த இடம், கருணாநிதியால் கழகத்துக்கு வாங்கி அளிக்கப்பட்டிருக்கிறது—அங்கே தனது தந்தை 'முத்துவேலரின்' நினைவாக ஒரு கழகமனை விரைவில் எழுப்பப்போவதாகவும் அவர் தெரிவித்தார்!!

தஞ்சை மாவட்ட மாநாட்டில் கூடியோரின் வகையினையும், சொற்பொழிவாற்றியோர் தந்த கருத்துமழையினையும், தொண்டர் குழாத்தின் சிறப்பினையும் எடுத்துக்காட்ட வேறெதுவும் தேவையில்லை — மாநாட்டின் விளைவாகக் கிடைத்திருக்கும் மிச்சம் சுமார் இருபதினாயிரம் ரூபாய்க்கு மேல் என்கின்ற ஒன்றே போதும்! ஒரு மாவட்ட மாநாட்டில் ரூபாய் 20,000 மிச்சம்--உண்மையிலேயே, இதனை அறிவித்தபோது, கருணாநிதியின் உள்ள மகிழ்வு, கண்களில் படர்ந்தது. "தம்பி! உன் கரம் பட்டு, எத்தனையோ பேர் நாட்டில் இலட்சாதிபதிகளாகியிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, உன் கரம் பட்டு, 20,000 கிடைத்தது ஒரு பெரிதா?" என்று அண்ணா அவர்கள் சொன்னார், மாநாட்டில். கருணாநிதி, கண்களைத் துடைத்துக்கொண்டார்! ஆர்வமும் உணர்ச்சியுமிக்க அந்தக் காளை— 'கலைஞர், கலைஞர்' என நாட்டோரால் அழைக்கப்படும் அத்தொண்டர்—அதே ஆரூரில் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் கழகம் வளர பட்டபாடு, என் கண் முன்னால் வந்தது—நானும், என் கண்களைத் துடைத்துக் கொண்டேன்!!

•

திராவிட முன்னேற்றக் கழகம், இன்றையதினம் அடைந்திருக்கும் வளர்ச்சியினையும், வெற்றியினையும் மாநாடுகளிலே மட்டுமல்ல ஒவ்வொரு பொதுக் கூட்டங்களிலும்கூடக் காண்கிறோம். மக்கள் மன்றத்திலே, நாள்தோறும் கழகம்பற்றிய பேரார்வம் வளர்ந்த வண்ணமேயிருக்கிறது! இதனை மாநாட்டில் பேசியஒவ்வொருவரும் எடுத்துச் சொல்லி ஆனந்தப் பட்டனர். எனினும், வடவரோடு பழகவும், அவர்தம் உள்ளங்களை உணரவும் நல்லதோர் வாய்ப்பைப் பெற்றிருக்கிற நமது சம்பத், நம்மைப் பற்றி வடவர் என்ன எண்ணுகின்றனர், நமது கழகம் கடந்த தேர்தலுக்குப் பிறகு எவர் எவருடைய கவனங்களை ஈர்த்து வருகிறது என்பதை, "வடவரும கழகமும்" எனும் தலைப்பில், தெளிவாக எடுத்துரைத்தார். ("நம் நாட்டில்", அவரது பேச்சினைப் படிக்க வேண்டும், தோழர்கள்). ஒரு காலத்தில், டில்லிக்கு எட்டுமோ நம் குரல், என்று எண்ணியோருண்டு! இவர்களால் தேர்தலில் நின்று ஓரிரு இடங்களிலாவது வெற்றிபெற முடியுமோஎன்று கொக்கரித்தோருண்டு!! ஏளனமும், கொக்கரிப்பும் மாறி, கனவெனக் கருதியதெல்லாம் நினைவாகி வருகிறது, இப்போது. கழகத்தின் கொள்கைகள் நாட்டவரின் மனதில் மட்டுமின்றி, நல்லவர்தம் உள்ளமெல்லாம் நிறைய ஆரம்பித்திருக்கிறது. ஒருபோது காங்கிரஸ்காரர்களாக விளங்கியோரெல்லாம் கூட இப்போது கழகம் நாடிவரு

(13-ம் பக்கம் பார்க்க)



# மொழி பெயர் தேயம்

20—4—58 ஞாயிறன்று காஞ்சிபுரத்திலிருந்து புறப்படும்போதே பொல பொல எனப் பொழுது விடிகின்ற நேரம். அண்ணாவுடன், செழியன், இள்ளிவளவன், நான் ஆகியோர் சென்றோம். பெங்களூர் செல்லும் சாலையில் தமிழ் நாட்டு எல்லையைக் கடந்து ஆந்திரத்தின் நிலப் பகுதியில் சென்றுகொண்டிருந்தோம். பசுமை என்பது பார்த்துத் தெரிந்து கொள்வதை விட நினைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டிய அளவில் இருந்த பகுதி நாங்கள் சென்றது. பெரிய பெரிய கற்களை எங்கிருந்தோ கொண்டுவந்து குவித்து வைத்ததைப் போலத் தோற்றமளிக்கும் குன்றுகள். கல் இருக்கின்றது; இடையிலே மண் இருக்கும் என நாமாக எண்ணிக் கொள்ளவேண்டும்; அவ்வளவுதான். அந்தப் பகுதியில் செல்லும்போது அந்தக் கற்களில் தலை இடித்துக் கொண்டதாக இரண்டொருமுறை தோன்றியது. பிறகுதான் நான் தூக்க மயக்கத்தில் பக்கத்தில் இருந்தவர்களின் தலைமீது முட்டிக்கொண்டு வந்தேன் என்பது தெரிந்தது!

மழையும் வளமும் குறைவான அந்தப் பகுதி தெலுங்கு நாட்டில் **இராயல சீமை** என்றழைக்கப்படுகின்றது. இராயர்களின் ஆட்சிக் காலத்தில் அவர்களுக்குச் சொந்தமான மண் என்பதனைக் குறிக்க இராயல (இராயர்களின்) சீமை என வழங்கப் பெறுகின்றது. இந்த வறண்ட பகுதிக்குச் சொந்தக்காரரான அந்த மன்னர்கள் தென்னகத்து அரசியலில் எப்படித்தான் அத்தனை புகழ் திரட்டினார்களோ என வியந்துகொண்டே அந்தப் பகுதியைக் கடந்தோம்.

குந்தக்கல்லிலும், குத்தியிலும் உள்ள தமிழர்கள் அண்ணாவின் உரையைச் செவி மடுக்க வேண்டும் என்ற தங்களுடைய நெடுநாளைய ஆவலைக் காட்டி அங்கு அழைத்துச் சென்றனர். குத்தியில் காலை 10 மணிக்குக் கூட்டம் என்று குறிப்பிட்டிருந்தும் மாலை 5 மணியளவில்தான் அங்கு போய்ச் சேர்ந்தோம். ஆனால் வழியில் ஏற்பட்ட தொல்லை, எங்களுக்கு அங்கு போய்ச் சேரமுடியுமா என்ற ஐயம்கூட அவ்வப்போது வந்தது எனலாம்.

**மா.கி. தசரதன்**

ஏனெனில் வழியில் ஓரிடத்தில் சுமார் 15 நிமிட நேரம் மணல் படலம் காற்றில் பறந்தது. வீசும் காற்றே சுற்றிச் சுற்றியடிக்கும் என்றால், அது மண்ணும் சுமந்து வந்தால் என்ன சொல்வது? போதாதற்கு குத்திக்கு நெடுந் தொலைவில் இருக்கும்போதே மழையும் பெய்யத் தொடங்கிவிட்டது என்றாலும், கார் ஓட்டிவந்த தோழர் துணிவோடு முன்னேறினார். அந்தத் தோழர் அர்ச்சுனனின் திறமையையும் இலட்சிய நடிகரின் அந்தக் காரையும் புகழ வேண்டிய இடம் பின்னால் ஒன்று இருக்கிறது. அங்கே அவர்களுக்கு நன்றி சொல்லலாம்!

குத்திக்குப் போனதும் அந்த ஊரைச் சுற்றி இருந்த மலைகளின் மீது தொடர்ச்சியாக இருந்த கோட்டை மதில் கம்பீரமாகத் தோற்றமளித்தது. ஊருக்குள் இரண்டொரு தெருக்களில் நுழைந்து சென்றோம். கோட்டைக்குள் இருந்த தெருக்கள் அவை. இடைக்காலத்து மன்னர்களின் காலத்து வாழ்வு ஒரு படம் போல மனத் திரையில் கோடிட்டது. 'இரயில்வே நிலையம்' எங்கே—இல்லை இல்லை எக்கட?-என்று கேட்டுக்கொண்டே இரண்டரைக் கல் தொலைவில் இருந்த அந்த இடத்தை அணுகும்போதே நமக்குச் சொந்தக்காரர்கள் இருக்கும் இடத்திற்கு வந்துவிட்டோம் என்ற உணர்ச்சி தோன்றியது. இரயில் நிலையத்தின் வாயிலில் அண்ணாவின் வருகை பார்த்து நமது நண்பர்கள் காத்திருந்தனர். காரைப் பார்த்தவுடன் வழக்கமாகத் தமிழகத்துத் தெருக்களில் கேட்கும் 'வாழ்க' முழக்கம் அன்று குத்தி இரயில் நிலையத்தையே ஒரு குலுக்குக் குலுக்கி விட்டிருக்கும் என நினைக்கின்றேன்.

உடனே நிலையம் சென்றோம். தோழர் ஒருவர் வரவேற்பு உரை நிகழ்த்தினார். தலைவரின் முன்னுரைக்குப் பதிலாகப் புன்னகை வெளிவந்தது. செழியன் தமிழனின் தொன்மை, மேன்மை பற்றி பேசினார். நான் பேசினேன். பின்னர் நீண்ட மகிழ்ச்சி ஆரவாரத்திறகிடையே அண்ணா எழுந்தார். வரவேற்புரையும் மலர்மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிந்தார்கள்.

தமிழகத்திலே இருந்து நெடுந் தொலைவு வந்துள்ள அவர்கள் தமிழ் நாட்டுக்குச் செய்யவேண்டிய தொண்டுகளைப் பற்றியும்

தெலுங்கு மக்களிடையே கலந்து பழக வேண்டியதின் தேவையையும் வகையையும் பற்றிச் சுமார் 1 மணி நேரம் அரியதொரு உரையாற்றினர்.

இரயில்வே நிலயத்தின் மண்டபம் திருமணக்கூடம்போல் எழில் ததும்ப அலங்கரிக்கப்பட்டிருந்தது. குத்தியில் வாழும் தமிழர்கள் அத்தனை பேரும் வந்திருந்தனர். தெலுங்கு நண்பர்களும் பலர் வந்திருந்தனர்.

குத்தி நிகழ்ச்சி முடிந்ததும் உடனே குந்தக்கல்லுக்குப் பயணமானோம்.

மழையோ விட்டபாடில்லை; வானம் இருண்டிருந்தது. வழியோ புதிது; எனினும் குந்தக்கல் போய்ச் சேரவேண்டும் என்ற ஆவல் — விரைவைத் தந்தது. குந்தக்கல் சென்ற பிறகு வழியறியாமல் எங்கெங்கோ சென்று திரும்பி இறுதியாக அடை மழையில் 'இரயில்வே நிலயம்' வந்தடைந்தோம்.

வரவேற்பு வளைவுகளும், வாயில் தோரணங்களும், வண்ணத் தாள் ஒப்பனைகளும் 'வருக வருக' என வரவேற்க, தமிழரும் தெலுங்கரும் கூடிநின்று மகிழ்ச்சிக் கடலில் ஆரவாரித்தனர்.

தமிழர்களுக்கும் தெலுங்கர்களுக்கும் உள்ள உறவினைப் பற்றியும் இருவரும் சேர்ந்திணைந்து வளர்ந்து வாழ வேண்டியதின் அவசியத்தையும் நான் பேசும்போது குறிப்பிட்டேன். நண்பர் செழியன் அவர்கள், பண்டைத் தமிழரின்மேன்மையினையும், இலக்கியத்தின் இறவாப் புகழினையும், தமிழ் மொழியின் அருமையினையும் பல அரிய எடுத்துக் காட்டுகளோடு குறிப்பிட்டு மீண்டும் அந்த நல்ல நிலை அடையவேண்டும் என அனைவரையும் கேட்டுக்கொண்டார்.

இறுதியாக அண்ணா, மனிதனுக்கு மனிதன் சாதியால் கொண்டிருக்கும் வேறுபாடுகளின் கொடுமைகளை எடுத்து விளக்கிப் பல அரிய உண்மைகளைச் சொன்னார். சாதி இருந்தால் என்ன என்று கேட்போருக்கு, சாதியில்லாத மேல்நாட்டான் விஞ்ஞானம் கண்டான், இரயில் கண்டான், மோட்டார் கண்டான், ஆகாய விமானம் கண்டான், அணுவைக் கண்டான்; இன்னும் பல அரிய சாதனைகளைச் சாதித்தான், அவனுக்கு வேண்டாத சாதி நமக்கு ஏன் என்று வினவினர். தமிழர் சமுதாயத்தில் சமத்துவம் ஏற்பட்டு உயர்வும் சிறப்பும் பெற வேண்டும் என வலியுறுத்தினர். தமிழன் நல்வாழ்வு வாழ வழி வகை கண்டிட வேண்டும் என வேண்டினர்.

அன்றைய தினம் கூட்டத்தில் இருந்த 'உயர் சாதி' ஆண்கள் அண்ணாவின் பேச்சைக் கேட்டு எழுச்சி பெற்றது ஒரு சிறப்பல்ல; பெண்கள் அண்ணாவின் வாதம் ஒவ்வொன்றையும் ஒப்புக்கொள்ளும் வகையில் விநாடிக்கு விநாடி புதிய ஆர்வம் கொண்டு விளங்கியது, உண்மையிலேயே பாராட்டற்பாலது, வரவேற்கவேண்டியதுமாகும்.

சொற்பொழிவு என்றமுறையில் இவ்வளவுதான், முன்னமே ஒப்புக்கொண்ட நிகழ்ச்சி. ஆனால் அண்ணாவிடம், தெலுங்கர்களின் சார்பாகச் சிலர் வந்து அண்ணா ஆங்கிலத்தில் பேசவேண்டும் எனத் தங்கள் ஆர்வத்தையெல்லாம் வெளியிட்டுக் கேட்டனர். "தமிழ் விழாவில், வேறு மொழியில் பேசி, அதன் தூய்மையைக் கெடுக்க மாட்டேன்" என்று அண்ணா, அவர்களுக்குச் சொல்லிவிட்டார். என்றாலும் அவர்கள் விடுவதாய் இல்லை. செயலாளர் நன்றி சொன்னதும் மறுபடியும் அண்ணாவிடம் வந்து "இப்போது விழா முடிந்துவிட்டது; இனி ஆங்கிலத்தில் பேசலாமே" என வாதிட்டனர். என்ன சொல்வது! அவர்கள் ஆர்வத்தைக் கண்ட அண்ணாவும் "சரி" என்றார். ஒரே ஆரவாரம், சுமார் அரைமணி நேரம் தமிழில் பேசிய கருத்துக்களை ஆங்கிலத்தில் திரட்டித் தந்து, மேலும் அரசியல்பொருளாதார உரிமையும் சமத்துவமும் தேவை என்பதனை எடுத்துச் சொல்லி மறுமுறை ஆந்திரப் பகுதிக்கு வரும்போதுதான் **தெலுங்கிலேயே பேசுவதாகச்** சொன்னார். கர ஒலியும், மகிழ்ச்சி ஆரவாரமும் நீண்டது.

"உங்களுக்கு ஆந்திரத்திலே ஆதரவு இருக்கிறதா?" என்று எளிதாகக் கேட்டுவிடுகின்றார்கள் எதிர்க் கட்சியினர். 'ஆந்திரர்கள் அடித்து நொருக்கிவிடுவார்கள்' என்கிறார் சுப்பிரமணியம். இவர்கள் எல்லாம் அன்றைய தினம் குத்திக்கும் குந்தக் கல்லுக்கும் வந்திருக்கவேண்டும். அங்கு நடந்த நிகழ்ச்சிகளையும், அதில் தெலுங்கர் காட்டிய அக்கறையையும் ஆர்வத்தையும், பார்த்திருக்க வேண்டும். அப்படி வந்திருந்தால், பார்த்திருந்தால் 'வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ' என ஏதோ இரண்டு சொற்கள் பேசிவிடமாட்டார்கள். போகட்டும் அவர்களை விடுவோம்.

அன்று இரவு அங்கேயே உணவை முடித்துக்கொண்டு பெல்லாரிக்குப் புறப்பட்டோம், இரவு பெல்லாரியில் தங்கிக் காலையில் துங்கபத்திரா அணைக்கட்டை

மனித இனத்தின் உளப் பண்புகளை, உணர்ச்சித் துடிப்புகளைப் படம் பிடித்துக் காட்டுவதுதான் இலக்கியம். அதன் பெரும் உறுப்புகள்தான்—கவிதை, நாடகம், சிறுகதை போன்றவை. இந்த ஒவ்வொரு உறுப்பின் உயிர்த் துடிப்புத்தான் காதல். காதல், கவிதை, இலக்கியம் இவையத்தனையும் சேர்ந்த கூட்டுச் சரக்குத்தான் மனித வாழ்க்கை. மனித வாழ்க்கையின் முன்னேற்றம்தான் — அதாவது, இந்த இலக்கிய வளர்ச்சிதான்—சரித்திர வளர்ச்சி - உலகத்தின் பொதுவான முன்னேற்றம்.

யும் ஹம்பி(Humbi)அழிவுகளையும் காண்பது என ஏற்பாடு.

குந்தக்கல்லிலிருந்து பெல்லாரி முப்பத்தைந்து கல் தொலைதான் என்றதும், ஒன்றரை மணி நேரத்தில் அங்கு போய்ச் சேர்ந்து உறங்கிடலாம் என நினைத்தோம். அந்த நினைவு எவ்வளவு தப்பு என்பதைப் பின்னால் உணர்ந்தோம்.

பெல்லாரி 35 என்று எழுதிக் காட்டிய வழியே சென்றோம். இரண்டு மூன்றுகல் தொலைவு கூடக் கடந்திருக்க மாட்டோம். வழி தவறிவிட்டோமோ என்று ஐயப்பட்டுக் கொண்டோம். ஏன் எனில் அந்தப் பாதை அப்படி இருந்தது. அதைப் பாதை என்று சொல்வது தப்பு. வண்டித் தடம் என்றால்கூடப்பொருந்தாது என எண்ணுகின்றேன். இதிலே இன்னொரு வேடிக்கை என்ன வென்றால், மைல் கற்களில் பெல்லாரி 30, 29, 28 என்று குறித்திருந்ததற்கு மேலே பம்பாய் 212, 213, 214 என்று எழுதியிருந்தது, எங்களுக்கு ஒன்றும் விளங்க வில்லை; ஒரே குழப்பமாக இருந்தது. பம்பாய்க்கு இத்துணை அண்மையிலா வந்துவிட்டோம் எனத் திகைத்தோம். இதிலே இன்னொரு வேடிக்கை, ஒரே திசையில் இருந்த இரண்டு ஊர்களில் ஒன்றின் இடைவெளி போகப் போகக் குறைந்தது! இன்னொன்றின் இடைவெளி போகப்போக மிகுந்தது! யாரோ எழுதியவன் கல்லைக் கெடுத்தான் என்பதை ஒரு இருபது கல் தொலைவு கடந்த பிறகுதான் கண்டுபிடித்தோம்.

அந்த இருபது கல் தொலைவு கடப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. வழியிலே நிறுத்தியிருந்த — இல்லை நின்று போன—லாரி ஒன்றினை அணுகி வழி இதுதானா என உறுதிப்படுத்திக்கொண்டு பெல்லாரி போய்ச் சேர்ந்தோம்.

அந்த 35-கல் தொலைவும் கடந்ததை கார் ஓட்டி வந்த தோழர் அர்ச்சுனன் அவர்களின் திறமைக்கும் காரின் உறுதிக்கும் சான்றாகத்தான் கொள்ளவேண்டும்!

இரவு பெல்லாரியில் இரயில் நிலையத்தில் தங்கி மறுநாள் காலை ஹாஸ்பெட் சென்றோம். அங் இருந்து மூன்று கல் தொலைவில் துங்கபத்திரா நதி அணைக்கட்டு இருக்கிறது.

இரண்டு மலைகளை இணைத்து நீரைத் தேக்கியுள்ள பெரிய சாதனையாகும் அது. அந்த அணையில் நீர் நிறைந்திருக்கும்போது நீரின் மேல்பரப்பளவு 135-சதுர மைல் என்று கணக்கிட்டிருக்கின்றனர். 'அடேயப்பா' — என்று மலைக்கத் தோன்றுகின்றது அல்லவா?

இத்தனைக்கும் ஆகியுள்ள செலவு ரூ. 60-கோடிதான். வடநாட்டில் பக்ராநங்கலுக்கு ஆன செலவு ரூ. 173·54 கோடி. இப்போது இரண்டையும் ஒப்பிட்டுப் பாருங்கள்—மலைப்பு மறையும்.

இன்றைய தினம் அந்த அணை மைசூர் மாநிலத்தைச் சேர்ந்தது. எனினும் அதனைச் சமைத்திடச் செலவான உடல் ஆற்றலில் பெரும் பகுதி தமிழர்களுடைய வியர்வையும் இரத்தமும் என்று அறிகின்றபோது 'ஊருக்கு உழைக்கும் தமிழர்களே உங்கள் ஊருக்கு என்றுதான் உழைக்கப் போகின்றீர்களோ?' என்று கேட்கத் தோன்றுகின்றது.

அங்கிருந்து 7 அல்லது 8 கல் தொலைவில் 'ஹம்பி' என்ற இடம் இருக்கிறது.

ஹம்பி என்பது இன்று ஒரு சிற்றூரின் பெயர். ஒரு காலத்தில் அங்கு இந்தத் தென்னகத்திலே புகழ் பெருக்கிய விஜய நகரப் பேரரசர்கள் இருந்து ஆண்டனர். வடநாட்டு மன்னர்களுக்கு எதிராகத்தென்னகத்தில் போர் முரசு ஒலித்த ஒரு மன்னர் பரம்பரை அங்கு வாழ்ந்திருந்தது. அந்த மன்னர்களின் வாழ்க்கையின் நிழற்படம்போல இன்றைய தினம் இங்கும் அங்குமாகச் சிதைந்த கலைக்கூடங்களும், குலைந்த கட்டிடங்களும், சின்னாபின்னமான சிற்பங்களும் கலைந்த கனவுபோல நமக்குக் காட்சியளிக்கின்றன.

அங்கு காணப்பெறும் சிற்பங்களையும், அரண்மனையின் கூறுகளையும், பிறவற்றையும் எடுத்தெழுதுவது எனின் தனிக் கட்டுரையே தேவைப்படும்.

சிறுவர்கள் விளையாடிய இடம் இது எனச்சிந்திய பூவும், சிதைந்த மணல் வீடும், சிதறிய பாண்டங்களும் கொண்டு சொல்வதுபோல அழிந்தஒரு பேரரசின் அடிச்சுவடு இதோ என்று 'ஹம்பி'யைக் குறிப்பிடலாம்.

அந்தக் கனவுலகிலிருந்து மீண்டு காற்றும் மணலும் கலந்து வீசிடும் வழியெல்லாம் கடந்து காஞ்சிபுரம் வந்தடைந்தோம்.

மொழி பெயர்ந்த தேயம்--தமிழ் மொழி பெயர்ந்த(தெலுங்குமொழி வழங்கிடும் தேசம்) தேயம் ஆயினும், வாழ்க்கைவழி நாகரிகம் முதலியன பெயரவில்லை என்பதைக் கண்டோம். நமது கருத்து அங்கே சிறக்கிறது; வளருகின்றது—வாழும்.

ஆந்திரம் நமது கருத்துக்களை ஆதரிக்கிறதுஎன்ற உறுதியினைத் தருவதாக அமைந்திருந்தது, இந்தச் சுற்றுப் பயண நிகழ்ச்சிகள்.

★

குடும்பம் ஒரு சிறு மனித சமூகமாய், மனித சமூகத்தின் அடிப்படைக் கூறாய்; அச்சமூகப் பண்பு எல்லாவற்றையும் வளர்க்கும் பண்ணையாய் அமைகிறது. அதன் பொருளாட்சியே சமூகம், நாடு, உலகம், ஆகிய பரந்த எல்லைகளின் பொருளாட்சிக்கு அடிப்படை.

★

உண்மையான அறிவாளிகளிடம் மற்றவர்களைத் தாழ்மையாக நினைக்கும் மனப்பான்மை இருக்காது. அதற்குப் பதிலாக மற்றவர்களிடம் கற்றுக்கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது என்ற ஆர்வம்தான் நிலைத்து நிற்கும்.

# மெய் தீண்டல்

V. V. இராமசாமி M.L.C.,

வள்ளுவர் பெருந்தகையின் வாய் மொழியைத் துய்த்து உணர்ந்த தோய்வினுடன், அழுந்தியறிந்த உணர்வினுடன், ஆன்றோர் மொழிந்த நூலினுடன் பல்காற்பழகிக் காணுதல் வேண்டும். அங்ஙனம் ஆய்ந்தாலன்றி அதன் அருமையை அறிதல் அரிதாகும். எடுத்துக்காட்டாகச் சிலவற்றை நோக்குவோம். உலகில் உள்ள செல்வங்கள் எல்லாவற்றிலும் மழலைச் செல்வம் சிறந்த செல்வம். இளமை முதல் இறுதிவரை மக்கள் உள்ளம் மழலையோடு பழகித்தான் வருகின்றது. அதன் அருமை உள்ளத்தில் உவகையை ஊற்றெடுத்து ஓடச்செய்கிறது. ஆனாலும் அதன் இயல்பைக் கவிஞர் சொல்லும்போது தமது வாழ்வியலிற்கண்ட தோய்வினுடன் தோய்ந்து உணராமல் எழுத்திலும் சொல்லிலும் அவற்றிற்குத் தாம் காணும் தவறான பொருளிலுமே நின்றுவிடுவதும் இயல்புபோல் காணப்படும் தவறாகும்.

குழந்தையைத் தாயோ தந்தையோ தமக்கையோ தாம் சென்று தூக்குவதும் தழுவிக்கொள்வதும் உடலுக்கு ஒருவகை இன்பம்தான். ஆனால் தாம் சென்று குழந்தையைத் தூக்குவதைக்காட்டிலும் அது ஊர்ந்துவந்து அல்லது "குறு குறு நடந்து சிறுகை நீட்டி" வந்து தீண்டுவதும், மேலே வந்து விழுவதும், குறிப்பாக முதுகில் வந்து மோதி அணைவதும் பூங்கையால் முகத்தை வருடுவதும், அத்துடன் அப்பா! அம்மா! என்று மழலை மொழிவதும் ஆகிய செயல்களே மிகுந்த இன்பம் தரத்தக்கன. நடைமுறையில் நிகழும் நிகழ்ச்சிகளை வைத்து உணர்பவர்களுக்கு இவைகளெல்லாம் தெளிவாகத் தெரியக் கூடியனவே.

ஆசிரியர் திரு வள்ளுவரும்—

"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற் கேட்டல் இன்பம் செவிக்கு"

என்று கூறியுள்ளார். "மக்களது மெய்யைத் தீண்டுதல்" என்று தவறாகப் பொருள் கூறுவோர் பலர். மக்களது என்று ஆறும் வேற்றுமை விரிப்பது பொருந்தாது. மக்களை எழுவாய் ஆக்கித் "தம் மக்கள் தமது உடம்பினைச் சார்தல்" என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். அதுவே முற்றிலும் பொருந்தும். தீண்டுதல் என்ற சொல்லின் போக்கினையும் நோக்குதல் வேண்டும். குழந்தை வந்து மெல்லத் தொட்டவுடனேயே மேனி சிலிர்க்கின்ற இன்பமும், தொட்டுக்கொண்டே அம்மா! என்றழைக்கும்போது உண்டாகும் செவிக்கின்பமும் ஒருங்கு சேர அமைத்துக் கூறியிருக்கும் திறன் இன்புறுத்துவதாகும்.

மணக்குடவர் "தம் மக்கள் தமது உடம்பினைச் சார்தல் தம் உடம்பிற்கு இன்பமாம்" என்றே உரைத்தார்.

"பொற்றொடிப் புதல்வர் ஓடி யாடவும்
செஞ்சாந்து சிதைந்த மார்பு"

என்பது பத்துப் பாட்டு.

"சிற்றில மகன்பூங் கையால்
திருமுகம் வருடப் பெற்ற
பெற்றதாய் தனினும் நெஞ்சம்
பெரிது உருகுநுமால் அன்ப"

என்று, சிவப்பிரகாசர் துய்த்து உணர்ந்த தாய்மொழியால் குறளுக்குக் கவிதை வடிவினால் உரை கண்டுள்ளார். மேலும் அவர் இயற்றிய பிரபுலிங்க லீலையில்,

குழலும் யாழும் இனியவெனக்
கூறுவண்ணம் மென்கனிவாய்
மழலை மொழிந்தும் உடற்கின்பம்
மருவ ஓடி மேல்விழுந்தும்
விழையும் அமிழ்தின் மிகவினிமை
விளைய நுகருஞ் சுவையடிசில்
செழிய சிறுகை யாலளைந்தும்
செய்தான் மோகம் ஈன்றோமை.

என்றும் பாடியருளினார். இதில் இன்னொன்றும் நோக்கத்தக்கது. "உடற்கின்பம் மருவ ஓடி மேல்விழுந்தும்" என்று குறளுக்கு நல்லுரை தந்தது மட்டுமன்றி, "நுகருஞ் சுவையடிசில்" என்று கூறியது நோக்கத்தக்கது மூன்று திருக்குறளை ஒரு பாடலில் எடுத்தாண்டு அம்மூன்று குறட்பாவின்கண் அமைந்துள்ள பொருள் நயங்களையும் நன்கு குறிப்பிட்டுப் பாடியுள்ளார். குழந்தை தன்னிடம் குறுகுறு நடந்து சிறுகை நீட்டிவந்து உணவிற் கைவைக்கும்போது, அந்த உணவு "நெய்யுடை அடிசில்" ஆக இருக்கவேண்டுமென்று கருதினான் பாண்டியன் அறிவுடை நம்பி. குழம்பு, மிளகுச்சாறு உற்றிய சோற்றில் குழந்தை கைவைப்பது பொருத்தமன்று. நெய்ச்சோற்றைக் குழந்தை இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழாவியும் மெய்பட விதிர்த்தும் விளையாடும்போது தந்தை உண்ணக்கூடாது; பார்த்துக்கொண்டிருத்தல் வேண்டும். குழந்தையின் செயலுக்குப் பின்பு குழந்தையைத் தூக்கி அப்பாற் கொண்டு போய்த் தாய் வைத்துக்கொண்டிருக்கத் தந்தை உணவு உண்ணுதல் நன்று. தந்தை உண்ணும்போது அந்த எச்சில் கலந்த அடிசிலை மகவும் உடனிருந்து உண்ணச் செய்தல் கூடாது. அது பெரியதோர் குற்றமாகும். "நுகருஞ் சுவையடிசிலை"க் குழந்தை உண்ட பின்பு தந்தை உண்ணல் வேண்டும். அவ்வாறன்றிக் கடைசியாக மோருஞ் சோறும் உண்ணும்வரை குழந்தையை உடனிருந்து உண்ணச் செய்வோர் குழந்தைக்கு உணவு உண்பிப்பவரல்லர், நோயை ஊட்டுபவராவார். மக்கள் சிறுகையளாவிய கூழ் பெற்றோர்க்கு அமிழ்தினும் ஆற்ற இனிது என்று ஆசிரியர் கூறினாரேயன்றி, பெற்றோர் உண்ணும் மிச்சிலொடு குழந்தை யுண்ணவேண்டுமென்று குறிப்பிட்டிலர். ஆகவே பெற்றோர்கள் தம் குழந்தையைத் தம்மொடு எச்சில் நுகரவிடாமல் முதலிற் சிறிது உண்டு மகிழ்வதற்கு மட்டும் இடம் கொடுத்து விலகுதல் வேண்டும் என்பது நன்றாய் உலகம் உணரவேண்டியதொன்றாகும். இவ்வாறு வழக்கியலும் கண்டு குறளுக்கு உரை நுவல்வோமாக.

★

மனிதனே உயிரினங்களுள் சிறந்தவன். அந்தச் சிறப்பை அவனுக்குத் தருவது அவனது சிந்தனைத் திறன். அதை முழுவதும் வளர்த்துக் கொள்வதே, அவன் பிறவிப் பயனை அடைவதற்குத் திறவுகோல்.

# "தூண்டிற் புழு!"

( M. S. வெங்கடாசலம் M.A., )

1885-ம் ஆண்டில் துவக்கப் பட்ட நிறுவனம் அது.

திராவிடத்தின் தங்கவயலாம் கோலாரில், தங்கம் வெட்டி எடுப்பதற்கென, ஆங்கிலேய ராலே துவக்கப்பட்ட அந்த நிறுவனத்தின் பெயர், டெய்லர் அண்டு கோ.,

அது கோலாரில் முதலீடு செய் திட்ட தொகை, ஏறக்குறைய ரூ. 160-இலட்சம்!

அலுவல் துவங்கிய ஆண்டி லிருந்து 10-ஆண்டுகள் வரை, அதன் பங்குதாரர்கள் அனை வரும், அவர்களது பங்குத் தொகையில் 20%விருந்து 75% வரை, இலாபமாகப் பெற்றிருக் கின்றனர் என்று புள்ளி விவரம் தரப்படுகிறது.

1896-லிருந்து 1917வரை அவர் களுக்குத் தரப்பட்ட பங்குப் பிரிவு அவர்களது பங்குத் தொகை யைப்போல் 100%விருந்து 140% வரை இருக்குமெனவும், கணக் கிடப்பட்டிருக்கிறது.

1917-முதல் 1940-வரை இந்தத் தொகை 20%விருந்து, 25%வரை தரப்பட்டதாம்!

மொத்தத்தில், துவக்கப்பட்ட காலத்திலிருந்து, பங்குதாரர்கள் பெற்றிருக்கும் பங்குப் பிரிவு, அவர்களது பங்குத் தொகை யினைப்போல் 25-மடங்கிலிருந்து, 30-மடங்கு வரை இருக்கக்கூடு மென்கிருர்கள். அதாவது, அந்த நிறுவனத்திடம் 100-ரூபா கொடுத்து ஒருவர் ஒரு பங்கு தாரராகச் சேர்திருந்திருந்தால், அவர் இதுவரை பெற்றிருக்கும் தொகை ஏறக்குறைய ரூ. 3000!

ஆனால் அந்த நிறுவனம் அர சாங்கத்திற்குச் செலுத்தி வந்த வரி, மொத்த வருமானத்தில் 5%தான்—1955 வரை!

எனவே, 5% வரியை, 10% ஆக்கிட வேண்டுமென, மைசூர் மாநில அரசு, 1955ல் முயன்ற போது, டில்லி குறுக்கிட்டு அவ் விதம் உயர்த்துவது கூடா தெனத் தடுத்துவிட்டது. மைசூ ரும் பணிந்தது!

இந்த நிறுவனம் திறமையாகப் பணியாற்றிடும் பொருட்டு, துவக் கத்திலிருந்தே மைசூர் அரசு அதற்கு வழங்கி வந்திருக்கிற சலுகைகள் பற்பல!

மிக்க் குறைந்தவரி விகிதத்தி லேயே தண்ணீர் வசதியும், மின் சார வசதியும் செய்து கொடுக்கப் பட்டிருக்கிறதுமைசூர் அரசினரால்!

அந்த நிறுவனமும், அதன் பங்குதாரர்களும், இந்த அளவு இலாபத்தினைப் பெற்ற பிறகு, தங்கக் கனிகளை, நாட்டுடைமை யாக்குவதைத் தவறென்று, எவ ரும் கூறிட இயலாது!

ஆனால், ஆவடியிலே துவங்கி இன்றுவரை, மூச்சுவிடாமல் சம தர்ம கீதம் பாடி வருகிற மத்திய அரசு, கோலார் தங்கக் கனிகளை நாட்டுடைமையாக்கிட வேண்டு மென, இரண்டு ஆண்டுகளுக்கு முன் மைசூர் அரசாங்கம் முயன்ற போது, குறுக்கிட்டு அதனைத் தடுத்திருக்கிறது.

அப்போது மைசூர் மாநிலத் தின் முதலமைச்சராக இருந்தவர் அனுமந்தையா. மாநிலத்து உரிமைகளுக்கெனப் போராடும் திண்மையும், திறனும் பெற்றவர் அவர்! எனவே, எப்படியும் நாட் டுடைமையாக்கிட வேண்டுமென் பதிலே தீவிரமாக ஈடுபட்டு, எடுத்த பணியினை இயற்றிவைத் தார்—எந்த இடையூறுக்கும் பயந்திடாமல்!

தங்கக் கனிகளை எப்படியும் நாட்டுடைமையாக்குவதென முடிவு செய்து, டெய்லர் ஆண்டு கோ., நிறுவனத்திற்கு நஷ்ட ஈடாக ரூ. 97·5 இலட்சம் தருவதற்கு ஒப்புக்கொண்டது மைசூர் அரசு!

நிறுவனம், போட்ட முதலீட் டைப்போல், 25-அல்லது 30- மடங்கு இலாபம் பெற்ற பிறகு, தரப்படவிருந்த இந்த நஷ்டஈடு, குறைவான தொகையல்ல என் பதனை எவரும் ஒப்புவர்!

ஆனால் மத்திய அரசாங்கம் இந்தப் பிரச்னையிலே தலையிட்டு, நஷ்டஈடாகத் தரவேண்டிய தொகை இன்னமும் அதிகமாக்கப் படவேண்டுமென, மைசூர் அர சுக்குத் தாக்கீது பிறப்பித்தது; எவ்வளவு தொகை தரப்பட வேண்டுமேன நிர்ணயிக்க ஒரு ஆலோசனைக் குழுவையும் நிய மித்தது.

அந்தக் குழு, மைசூர் அரசு ரூ 119 கோடி, நஷ்ட ஈடாகத் தர வேண்டும் என்று கருத்தறிவித் தது.

ஆனாலும், ரூ 164 கோடிதான் தரப்படவேண்டுமென்று மத்திய அரசாங்கம் மைசூர் அரசினை வற் புறுத்தித்தாக்கீது பிறப்பித்திருக் கிறது. எப்படியும், தங்கக் கனிக் கள் நாட்டுமையாக்கப்பட வேண்டு மென்ற தீவிர ஆர்வத்தில், மத் திய அரசின் கட்டளைக்கு மைசூர் பணிந்தது—ரூ 164 கோடி நஷ்ட ஈடாகத் தரப்பட்டது.

என்ன பொருள் இதற்கு? ஆவடியிலே துவக்கப்பட்டு—பின் னர் அமிர்தசரசில் ஓரளவு மாற்றி யமைக்கப்பட்டு — இடையீடில்லா மல்'பாடப்படுகின்ற 'சமதர்மகீதம்' உண்மையிலேப்ய இன்றைக்குஆட் சிப் பொறுப்பிலேயிருக்கிற காங் கிரசாரின் உள்ளத்திலேயிருந்து எழுகிற கீதமானல், ஒருதொழிலை நாட்டுமையாக்குவதற்கு, அவர் கள் இடையூறாக இருந்திடுகின்ற நிலை ஏன்?

தங்கம் தோண்டியெடுக்கப்படுவ தென்பது சாதாரணத் தொழி லல்ல! இன்றைய உலகத்து வாணிபமெல்லாம் தங்கத்தின்

அடிப்படையில்தான் நிகழ்த்தப்படுகின்றது என்றால், அது மிகையல்ல!

ஒருநாடு மற்றொரு நாட்டுப் பொருள்களை விற்றாலோ வாங்கினாலோ, அந்தப் பொருளுக்குப் பதிலாக, பெறப்படுகின்ற அல்லது தரப்படுகின்ற பொருள் தங்கமாகத்தானிருக்கும்— இங்கிலாந்திலிருந்து இயந்திரங்களை நாம் இறக்குமதி செய்தால், அந்தஇயந்திரங்களின் விலையாக நமதுரூபாய் நோட்டுக்களை அங்கே அனுப்பினால், ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். காரணம், இந்தியாவில் வழங்கிவரும் ரூபாய்க்கு மதிப்பு இந்தியாவில்தானேயொழிய, இங்கிலாந்திலோ, அல்லதுவேறெந்த நாட்டிலோ இல்லை! அதேபோலத்தான் இங்கிலாந்து, நாணயம் இந்தியமக்களுக்குப் பயன்படாது.

எனவே தங்கம், வெளிநாட்டு வாணிபத்துக்கு உரிய, தேவையானதோர் சாதனமாக, நாணயமாற்றின் கருவியாகப் பயன்படுகிறது.

நாணயமாற்றுக்குக்கருவியாகப் பயன்படுவதோடு மட்டும் நின்றுவிடவில்லை, அதன் உபயோகம் தங்கத்தின் விலையின் அடிப்படையில் தான், நாணயமாற்று விகிதங்கள்—1 ரூபாய்க்கு எத்தனை ஸ்டர்லிங், ஒரு ஸ்டர்லிங்குக்குஎத்தனை டாலர், ஒரு டாலருக்கு எத்தனை ரூபிள் என்பன போன்ற விகிதங்கள்—நிர்ணயிக்கப்படுகின்றன. எனவே நாணயமாற்று விகிதத்தின் கட்டளை அளவாக விளங்குகிறது தங்கம்!

தங்கத்தை வெட்டியெடுப்பதாலேயே ஒரு நாடு தரணிபோற்றத் தகு செல்வம் பெற்றதாக ஆகிவிடும் என்பதல்ல! ஆனால்! வெட்டியெடுக்கப்பட்ட தங்கத்தை வைத்துக்கொண்டு, எண்ணிறந்த பற்பல பொருள்களை—மூலப்பொருளானாலும், இயந்திரங்களானாலும், உணவுப் பொருள்களானாலும், மற்றெதுவாயினும் —அவற்றைப் பற்பல நாடுகளிலேயிருந்து எளிதில் பெறமுடியும்!

இத்தகையதோர் தொழிலை —நாட்டுக்கு உயிர்போன்ற தங்கக் கனிகளை, நாட்டுடைமையாக்குவதில், எந்த அரசும் மாறுபட்ட கருத்தினைத் தரமுடியாது! அரசியற் பேரறிஞர்களும், பொருளியல் நிபுணர்களும் கூட மாறுபட்ட கருத்தினைத் தந்ததில்லை, இதுவரை!

அங்ஙனமிருக்க, கோலார் தங்கக் கனிகளை மைசூர் அரசு நாட்டுடைமையாக்கிட முயன்றபோது, மத்திய அரசாங்கம் குறுக்கே நின்றிடக் காரணமென்ன? கொள்ளை கொள்ளையாகப் பணத்தைக் கொட்டிக்கொடு, என்று தாக்கீது பிறப்பிக்கக் காரணமென்ன?

நாட்டையே ஒரு கலக்குக்கலக்கிவிட்ட முந்திரா பேர ஊழலிலே கூட, பங்கு மார்க்கட் விலையை விட, ஒரு ரூபாயோ இரண்டு ரூபாயோதான் ஒவ்வொரு பங்குக்கும் அதிகமாகத் தரப்பட்டிருக்கிறது. ஆனால் டெய்லர் அண்டு கோ பங்குதாரர்கள், பங்கு மார்க்கட்டில், அப்போது வழக்கிலிருந்த விலையைப்போல் மூன்று மடங்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டனரென்னும் திடுக்கிடும் தகவலைப் பாராளுமன்றத்தில் வெளியிட்டிருக்கிறார், திரு. முகமதுஇமாம் என்னும் பாராளுமன்ற உறுப்பினர்!

"கோலார் தங்கச் சுரங்கத்தின் நஷ்ட ஈட்டுக்கெனத் தொகை தரப்பட்டதில் காணப்படும் அலட்சியப் போக்கினையும் ஊதாரித்தனத்தினையும் பார்க்கும்போது, முந்திரா பேர ஊழல், மூலைக்குப்போய் மறைந்துவிடுகிறது" என்று முழக்கமிட்டிருக்கிறார் அவர்.

நிகழ்ச்சியினை அழகாகப் படம் பிடித்துக்காட்டி, கனல் கக்குகிற முறையில் கண்டனத்தைத் தெரிவித்தஅவர், பேசுவதற்குப்போதுமான நேரம் கிடைக்காததாலோ, அல்லது வேறு எந்தக் காரணத்தாலோ, இத்தகைய தொரு நிலை ஏற்பட்டதற்குக் காரணமென்ன என்னும் ஆராய்ச்சியிலே ஈடுபடவில்லை.

டெய்லர் அண்டு கோவுக்கு பற்பல வசதிகளைச் செய்துகொடுத்திருக்கிறது மைசூர் அரசாங்கம் —நீர் வசதியும், மின்சார வசதியும் குறைந்த கட்டணத்தில் தரப்பட்டிருக்கிறது— அதையெல்லாம் கணக்கிடாமல், இவ்வளவு நஷ்ட ஈடு தருமாறு தாக்கீது பிறப்பித்தீர்களே, இது நியாயமா?—என்று கேட்டிருக்கிறார், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் திரு. சங்கரையா!

இது மைசூர் அரசாங்கத்தால் முடிவு செய்யப்படவேண்டிய பிரச்சனை — மத்திய அரசாங்கத்தாலல்ல—இந்தப் பிரச்சினையில் மத்திய அரசாங்கம் தலையிட்டது அதன் எதேச்சாதிகாரப் போக்கினையே காட்டுகிறது — என்று கண்டனம் தெரிவித்திருக்கிறார், கம்யூனிஸ்ட் உறுப்பினர் திருமதி. பார்வதி கிருஷ்ணன்!

மற்றொரு விளக்கமும் தரப்பட்டிருக்கிறது, திரு. கேசவா என்னும் காங்கிரசு உறுப்பினரால்!

குற்றம் செய்த பையனைப் பெற்றோர்கள் தண்டிக்கும் முறையில், தங்கக் கனிகளை நாட்டுடைமையாக்க விரும்பிய மைசூர் அரசாங்கத்திடம் மத்திய அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறது, என்கிறார் அவர்!

என்ன பொருள் இதற்கு?

எந்தப் பொருளையும் நாட்டு உடைமையாக்குவதை மத்திய அரசாசாங்கம் விரும்பவில்லையென்று பொருளா?

மாநிலங்கள், நகராண்மைக் கழகங்களைப்போல்தான் இயங்கிட வேண்டும், மத்திய அரசாங்கம் இடுகின்றகட்டளை ஒவ்வொன்றையும் இஷ்டப்படி நிறைவேற்ற வேண்டும், இல்லையென்றால் "தண்டனைகள்" அவைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், மத்திய அரசாங்கம் கருதுகிறதென்று பொருளா?

அல்லது கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பது என்று பழமொழி சொல்லுவார்களே, அந்தப் போக்கிலே டில்லி மூலவர்கள் நடக்கிறார்கள் என்று பொருளா?

மைசூர் மாநிலத்து மக்களின் நலனில் உள்ள அக்கறையை விட ஆங்கிலேயரால் நடத்தப்படுகின்ற அந்தக் கம்பெனியின் இலாபத்தில் அக்கறை டில்லி அரசாங்கத்துக்கு அதிகம் என்று, இத்தகு நடவடிக்கைக்கு நாம் பொருள் கொள்ளலாமா?

பற்பலரால்—பற்பல கட்சிகளைச் சார்ந்தவரால் — மத்திய அரசாங்கத்தின் கோணல் போக்கிற்குக் கண்டனமும், காரண காரியங்களும் எடுத்தியம்பப்பட்ட பிறகு மத்திய அமைச்சர் திரு. மாளவியா தருகின்ற பதில், நம்மைத் திடுக்கிடச் செய்கிறது.

கொடுக்கப்பட்ட நஷ்ட ஈடுத் தொகை நியாயமானதுதான் என்று வாதாடவில்லை அவர்—

அவ்வாறு வாதாடியிருந்தால், அந்த வாதத்தில் உண்மை இருக்கிறதோ இல்லையோ, மத்திய அரசாங்கம், நடந்துகொண்ட விதம் நியாயமானது என்று கூடத் தோன்றக்கூடும், பலருக்கு!

ஆனால் அவரது விளக்கம் விபரீதமாகத் தோன்றுகிறது.

**"கோலார் தங்கக் கனிகளை நாட்டு உடமையாக்க வேண்டாமென்று மத்திய அரசாங்கம் சொன்னதற்குக் காரணம், நாணயச் செலாவணியிலிருந்த கஷ்டமான நிலை ஒரு புறமிருந்தாலும், நாட்டுடைமையாக்குவதானால், வெளிநாடுகளிலேயிருந்து இந்தியாவுக்கு நிறைய மூலதனம் வருவதற்கு இடையூறாக இருக்கும் என்று மத்திய அரசாங்கம் கருதியது," என்று பேசியிருக்கிறார் அவர்!**

வெளிநாட்டு மூலதனம் நம் நாட்டிற்கு நிறைய வரவேண்டும் என்பதற்காக, ஒரு தொழிலை, நாட்டிற்கு வளம் தேடித்தரும் தொழிலை, நாட்டுடைமையாக்கக் கூடாதென்று தடுக்கிற காங்கிரசு அரசாங்கம், சமதர்மத்தைக் குறிக்கோளாகக் கொண்டது என்று எப்படி நாம் நம்புவது, ஒப்புவது?

இங்கே நாம் கவனிக்க வேண்டிய உண்மை அதுமட்டுமல்ல!

வெளிநாட்டு மூலதனம் வரவேற்கப் படுகிறது, ஆட்சியாளர்களால் — உண்மைதான. அந்த மூலதனம், பற்பல திட்டங்களுக்கும், புதுப்புது ஆலைகளைத் துவக்கிடுவதற்கும் பயன்படுபடுத்தப் படுகிறது—எவரும் மறுத்திடவில்லை!

ஆனால் அந்தத் திட்டங்களிலே பெரும் பகுதி வடக்கே!—கோலார் பிலாய், துர்காபூர் ஆலைகளுக்கும் மற்றும் பற்பல தொழிற்சாலைகளுக்கும்தான் வெளிநாட்டின் மூலதனத்தின் பெரும்பகுதி பயன்படுத்தப்படுகிறதேதவிர, அதிலே தென்னகத்துக்குக் கிடைக்கிற தொகை மிகமிகக் குறைவு — அரசாங்கத்தாலேயே தரப்படுகிற புள்ளி விவரம் காட்டுகிற உண்மை இது;

எனவே வெளிநாட்டு மூலதனம் பயன்படுத்தபபடுவது வடக்கே! அதனைத் தூண்டில் போட்டு இழுக்க, தூண்டிற் புழுவாகப் பயன்படுத்தப்படுவது, தென்னகத்துப் பணம்! எனிந்த நிலை?

★

# "வானொலியும்— இலக்கியக் கொலையும்"

(அரிமறும் கதிரவன்)

30—3—58 காலை 7-மணி முதல் இரவு 11-மணிவரை திருச்சி வானொலியில் சிந்தையள்ளும் முத்தமிழ்க் காப்பியமாம் 'சிலப்பதிகாரத்திலிருந்து சில நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்பினார்கள். இந்த நிகழ்ச்சியில் பெரிதும் முழுமை இன்மையையே "பத்தினித் தெய்வம்" என்ற நாடகம் ஒன்று அன்றைய நிகழ்ச்சிக்கு மணிமுடிபோல் அமைத்திருந்தார்கள்.

சிலப்பதிகாரம், தமிழக வரலாற்றினைத் தன் உள்ளே தாங்கியுள்ளது என்பதையும், சங்க காலத் தமிழக மக்கள் பண்பாடு வடநாட்டுப் பண்பாட்டினின்று முற்றிலும் வேறுபட்டது என்பதையும்எடுத்துக்காட்டுகின்றது. இந்தச் செய்தி அறியமாட்டாத நுண்மான் நுழைபுலமற்ற, இலக்கிய அறிவை முற்றும் உணராத முறையில் நாடகத்தை உருவாக்கி நடாத்தியுள்ளார்கள். இலக்கியத் தவறுகள் பல அன்றைய நாடகத்தில் மலிந்திருந்ததைக் கண்டு நாம் பெரிதும் வருந்துகின்றோம்.

மனையறம் படுத்தப் பெற்ற மணமக்கள் இருவரும் உரையாடியதாகத்தமிழ் இலக்கணமோ, இலக்கியமோ இயம்பியதாக நாம் அறியோம். ஏனெனில் பண்பாடு குறையாத மக்கள் தமிழர், மணமாகிய அன்று மணமகன் கூறுவனவற்றிற்கெல்லாம் மணமகள் மறுமொழி தருதல் இல்லை என்பதைத்தொல்காப்பியப்பொருளதிகாரத்தில் (இளம்) 108-ஆம் சூத்திரத்தில்:—

"சொல்லெதிர் மொழிதல் அருமைத் தாகலின்
அல்ல கூற்றுமொழி அவள்வயி னான"

என்று விளக்குகிறார்.

தலைவி பேசமாட்டாள், என்றாலும் அவள் உள்ளக் குறிப்பை முகம் கோட்டுக் காட்டும் என்பதை (இளம்)—மூத்: 116

"தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லைப்
பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்
பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப"

என்று நீர் உள்ள குடத்தில் கசிவு இருத்தல்போல உள்ளம் புலப்படும் என்கிறார். ஆனால் தலைவன் முன் தலைவி பேசுதல் இல்லை என்று அழுத்தந்திருத்தமாகக் கூறி உள்ளார். இந்த மரபு தமிழ் இலக்கண, இலக்கிய மரபு.

இந்தப் பண்பைப் பழுதறக் கற்றுத் துறைபோகிய இளங்கோ அடிகள் தம் சிலம்பில் கோவலன் கண்ணகி மணவிழாவையும் மனையறம் படுத்தியமையையும் காட்டுகிறார். கோவலன் "மாசறு பொன்னே! வலம்புரி முத்தே" என்று தொடங்கி கண்ணகியைப் பலவாறு புகழ்ந்து உலவாக் கட்டுரை ஒன்று மொழிந்ததாகக் காட்டுகிறார். இங்கு கண்ணகி கோவலன் புகழ்ந்ததை ஒட்டியோ அவனைப் புகழ்ந்தோ மறுமொழி பகர்ந்தாளில்லை. இலக்கண வரம்பு இடம்தரவில்லை; தமிழ்ப் பண்பு தலைதூக்கி நிற்கின்றது. இது உண்மையாக இலக்கியத்தில் உள்ளது.

ஆனால் திருச்சி வானொலி நிலையத்தாரின் பத்தினித் தெய்வமாகிய கண்ணகி கோவலனைப் புகழ்கின்றாள். கோவலன் 'மாசறு பொனனே!' என்றான், கண்ணகி கோவலனை, உங்களை விடவா?' என ஒருபடி மேலே புகழ்கின்றாள். இந்தக் கண்ணகி 1958-இல் வந்தவள் போலும்! நவீன உண்மையில் இலக்கிய மரபு அறியா மக்களிடம சிலபபதிகாரம் சிக்கிச் சிதைக்கபபடுகிறது.

இந்தத் தவறுக்கு அவர்கள் மறுமொழி: "நாடக அமைப்புக்காகச் சிற்சில உத்திகள அவசியமெனக் கருதியதால் இல்வாறு சில காட்சிகள் சேர்க்கப்பட்டன

என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்''

நாடக அமைப்புக்காக நடவாத, முறையற்ற, பண்பாடற்றசெயலைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் தமிழ் மரபைக் குழிதோண்டிப் புதைக்கிறார்கள். இது உத்தியா? அல்லது நிறைவற்ற புத்தியா? தாங்கள் பின்பற்றி அமைக்கும் காப்பியம் 2,000 ஆண்டுகட்கு முற்பட்டது என்பதையும், தமிழ் மரபுகளைக் கொண்டது என்பதையும் எண்ண முடியாமைக்குரிய காரணம் தெரியவில்லை.

சிலப்பதிகாரம் — முத்தமிழ்க் காப்பியம் — இலக்கிய வளமுள்ள இன் தமிழ்க் காப்பியம் — தமிழ் மரபுகளைத் தனித் தன்மையுடன் படமிட்டுக் காட்டவல்ல காப்பியம் என்பதை இலக்கிய ஆய்வு படைத்த எவரும் ஒப்புவர். இத் தகைய ஆய்வற்றவரால் அமைக்கப்பெற்று ஒலிபரப்பிவிட்டு "உத்திகள்'' என்று அமைவு படுத்த முற்படுவது முறையல்ல.

அமைக்கப்பட்ட பல பாடல்களில் சில குறிப்பிடத் தகுந்த தவறுகளைக் காணுவோம். தவறுகளைப் படித்த பின்னர் தமிழ் உள்ளங்கள் வேதனையால் விம்மத்தான் செய்யும்.

கோவலன் கண்ணகியின் சிலம்பைப் பெற்று விற்றுவர மதுரை சென்றவன், கொற்றவன் ஆணையால் கொலைப்பட்டான் என்ற செய்தியைக் கண்ணகிக்குக் கூற வேண்டிய இடம் வருகிறது. இந்த இடத்தில் "சிலம்பு'' என்று அப்படியே கூறிவிட்டால் கண்ணகி மயங்கி விழுந்துவிடுவாளே என்று கவிஞர் மறைபொருளில் அதாவது இலக்கியச் சொல்லாக "ஞெகிழம்'' என்று கூறுகிறார். "ஞெகிழம'' என்றால் சிலம்பு என்று பொருள். இது "நெகிழ'' என்று இரண்டுமுறை திரும்பத் திரும்ப வருகிறது வானொலியில் 'ஞெகிழம்' என்பதும் 'நெகிழ' என்பதும் ஒன்றுதான் என்று எண்ணிவிட்டார்கள் போலும். 'நெகிழ' என்று அந்த இடத்தில் இருப்பது இலக்கியக் கொலை என்பதைத் தவிர வேறு என்ன என்று விளம்புவது?

மாதவியின் அரங்கேற்றத்தை மிக்க கவனமும் கருத்தும் கொண்டு 'அரங்கேற்றுக் காதை' யில் அழகுபடக் காட்டுகிறார் அடிகள். ஒவ்வொரு காதையின் முடிவிலும் அந்தந்தக் காதையின் முழுமை அடங்கிய ஒரு வெண்பா அமையப் பெற்றுள்ளது. அதே போல் அரங்கேற்றுக் காதை இறுதியிலும் ஒரு வெண்பா உண்டு. கதை ஓட்டத்தை விரைவு படுத்த வெண்பாவை மட்டும் கூறி நாடகத்தை நடாத்துவது போற்றக் கூடியதே, அந்த வெண்பாவையாவது முழுதும் படித்திருக்கலாம்! காதையைத்தான் முழுவதும் படிக்க நேரமில்லை என்றாலும் வெண்பாவின் முடிந்த கருத்தையும் படிக்காமல் உருவாக்கிவிட்டார்கள், "மாதவி பண்ணின்ற கூத்தும் பதினொன்றும்'' பதிய முறையாக ஆடினாள் என்று வெண்பாவில் உள்ளது.

ஆனால் வானொலிப் பாடலில் "பண்ணின்ற கூத்துப் பதினைந்தும்' என்று நான்கு சேர்த்து 1958-ல் மாதவி ஆடினாள் போலும்! அது மட்டுமல்ல இது 15-என்பதை வானொலியின் தண்டமிழாசான் சாத்தனார் வேறு மீண்டும் கூறு கிறார்! பாடலில் மட்டுமல்ல தவறு எங்கள் உரையாடலிலும் தவறுதான் என்பதைக் காட்டுகிறது.

மற்றும் ஒன்று: தமிழகத்தில் எழுந்த நூல்களில் இறுதியில் அறவுரை கூறுதல் உண்டு. அது போல சிலப்பதிகாரத்தில், வரந்தரு காதையில் இளங்கோ பல அறவுரைகளைக் கூறி மக்களை அறிவு பெறச் செய்ய முனைகின்றார். அந்த அறவுரைகளையாவது நன்றாகப் படித்து, பயின்று எழுதப் பெற்றிருக்கவேண்டும். இலக்கிய ஈடுபாடு குறைவு காரணமாகப் பெருந் தவறு செய்துள்ளார்கள்—என்பது நிலையப் பாடலில் காணப்பட்டது.

சிலப்பதிகாரம்--வரந்தருகாதை 189-ஆம் வரியில் "ஊனூண் துறமின்'' என அறவுரை தருகிறார். இதனை "ஊனூண்டு உறமின்'' என அமைத்தனர். மாமிசம் உண்ணாதே என்று சிலம்பு சொல்ல திருச்சி நிலையம் "மாமிசம் உண்'' என்று மொழிகின்றது. ஐயகோ! பரிதாபம்!!

அதுமட்டுமா? 195ஆம் வரியில் சிலம்பில் "பிழையுயிர் ஓம்பின்'' என்றார் அடிகள். பிழை செய்தலைத் தவிர்க்க விழையுங்கள் என்றார் இளங்கோ அடிகள். ஆனால் "பிழையுயிர் ஒப்புமின்'' என்று வானொலியின் பாட்டு முழங்குகிறது.

இந்த அளவில் இலக்கியங்களை வானொலி நிலையத்தார் பயன்படுத்துவார்கள் என்றால் தமிழ் இலக்கிய உலகம் கண்ணீர் சிந்துவதைத்தவிர வேறு செய்வதற்கு ஒன்றும் இல்லை.

சிறந்த இலக்கியங்களை நாடகமாக்கும் செயலில் ஈடுபடும் பொழுது அந்தந்த இலக்கியத்தில் நுண்மான் நுழைபுலமும், ஆய்வுத் திறனும் அமையப் பெற்றோரைப் பயன்படுத்திச் சிறப்புறச் செய்தலே செயற்படும் முறையாகும். அதனைவிட்டு கூலிக்கு மாரடிக்கும் கும்பலைக் கொண்டு, பழந்தமிழ்ப் பண்பைப் பாழாக்கும் செயலில் இனியாவது ஈடுபடாமல் இருக்க விழைகின்றோம். தமிழகத்தில் ஒருகதை உண்டு: குற்றம் காணப்பட்டால், குற்றம் குற்றமே என எடுத்துக் காட்டிய நக்கீரர் பரம்பரை உண்டு என்பதுதான்.

சிலப்பதிகாரம் ஏதோ எளிய 'கீர்த்தனங்கள்' எனக்கொண்டு பெருந்தவறு செய்துவிட்டார்கள் தொல்காப்பியரே 193 ஆம் சூத்திரத்தில்

"இசைதிரிந் திசைப்பினும் இயையுமன் பொருளே
அசைதிரிந் திசையா என்மனார் புலவர்''—

என்று கூறுகிறார். இசையை வேண்டுமானால் திரித்து ஒலித்தாலும் பொருள் இயையும்; ஆனால் அசையைத் திரித்து ஒலித்தால் பொருள் பொருள் பெறாது என்கிறார். இதனையும் வானொலியார் உணர்ந்தவர்களாய்த் தெரியவில்லை.

தமிழ் இலக்கியத் தொடர்பான நிகழ்ச்சிகளில் கானொன்றும்போது மிக்க கவனத்துடன் அந்தந்த அருந்தமிழ் காவியத்தின் பண்பு எள்ளளவும் குறையாத முறையில் எடுத்தாள விழைகின்றோம். வானொலியார் தமிழ் இலக்கிய ஆய்வுடையார்களை அலுவலர்களாக அமைத்துத் தமிழகத்திற்குத் தொண்டு செய்ய விழைகின்றோம்.

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

இன்றனர். காட்டூர் இராமையா என்பார், மாநாட்டுக்கு வந்த கழகத் தலைவர்களுக்கான உறையுள்-உணவு வசதிகளைச் செய்தார். அவர் ஒரு ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு, காங்கிரசிலே ஒரு குறிப்பிட்ட இடம் வகித்தவர். இப்போது, நமக்கு ஒரு நண்பர் என்பதுமட்டுமின்றி, சுவை மணக்கும் விருந்து வைத்தார்-அதிலும் எப்படி? பலாச்சுளையைத் தேனில் தோய்த்து, விருந்து!! குளிக்கரை இசைப்பெருங்கோ கே. எஸ். பிச்சையப்பா, பாவா கலியாணசுந்தரனார், ஆகிய இருவரும் தலைவர்களுக்கு ஒவ்வொரு வேளை விருந்தளித்து மகிழ்ந்தனர். நேரடி கழகத்தோழர்கள் அல்ல என்றாலும், நாட்டின் வளர்ச்சியில் அக்கரைகொண்ட நல்லவர்கள் ஆவார்கள்! குளிக்கரை பிச்சையப்பா, வயிற்றுக்கு விருந்து அளித்தது மட்டுமல்ல, நாயன மூலம் இசை விருந்தும் தந்தார், மாநாட்டினருக்கு-நாகூர் இசை முரசு அனிபா அளித்த இயக்க முரசுக்குப் பிறகு. மாநாட்டின் வெற்றியில் அக்கறைகொண்டு வேலை செய்தார், திருவாரூரில் முக்கியமானவர்களில் ஒருவரான இராசசந்தானம் என்பவர்! இப்படி கழகத்தில் நேரடித் தொடர்பு கொள்ளாதோர்கூட, நம்மையறியவும், நமக்கான ஒத்துழைப்புகளை வலுவில் அளிக்கவும், முன்வருகிறார்கள் எனின், இந்த மலர்ச்சியின் அளவையும் வலிவையும், பத்தாண்டுகளுக்கு முன்பு 'கண்ணீரை மட்டுமே' மூலதனமாகக் கொண்டு கழகம் அமைத்த நாம் மட்டுமே அறிய முடியும்!!

"என்ன! மாநாட்டுக்கு, ஏதாவது பணவுதவி வேண்டுமோ? தருகிறேன்!!", என்றாராம் வரவேற்புக்குழுவினரைச் சந்தித்த, ஒரு பெரியவர். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு—திராவிடர் கழகமாயிருந்த காலத்தில்—அந்தப் பெரியவர்கள் போன்றோரை நன்கொடை வசூல் செய்தால்தான் ஒரு பொதுக்கூட்டமாவது நடத்த முடியும். இன்று அவர் வலுவில் வருகிறார்! வரவேற்புக் குழுவினரோ மிக்க நன்றி. கழகக் கிளைகளே, வேண்டுமளக்கு உதவி அளித்துள்ளன", என்று பதில் அளித்தனராம். கூட்டம் ஒன்றுக்கு நூறு ரூபாய் வீதமும், கிளைக் கழகங்கள் ஒவ்வொன்றும் ரூபாய் பத்துமாக, சுமார் 5000-க்கு மேல் வந்ததாம் மாநாட்டின் செலவுக்கு! அந்தளவுக்கு, ஏழையரும், கழகக் காளையரும் அளிக்கும் நன்கொடைகளைக் கொண்டே, கழகத்தை நடாத்திடும் தனித்ததோர் அரசியல் கட்சியாக வளர்ந்து வருகிறோம்; நாம். இந்த வளர்ச்சியின் வகை, பெருமிதம் தரக்கூடியதே! பலாச்சுளையும், அதனைத் தேனில் தோய்த்து உண்ணும்போது கிடைக்கும் சுவையும் — மிகமிகப் பெரிது என்பதோடு, அதில் பொதிந்திருக்கும் 'விளக்கம்' குறிப்பிடக்கூடியதாகும்!!

ஆனால், அதே சமயத்தில், அண்ணா அவர்கள் குறிப்பிட்டது போல மற்றொன்றினையும் மறந்துவிடுவதற்கில்லை, நாம். 300க்கு மேற்பட்ட கிளைக்கழகங்கள் இருந்தும் ஆதரவுதர நல்லவர்கள் இருந்தும்—ஆர்வமிக்க காளையர் பலர் இருந்தும்—கண் மூடாது உழைக்கும் உழவர்கள் ஏராளமிருந்தும் — 'தஞ்சை' தேர்தலில் "ஒருவரை"க்கூட சட்டசபைக்குத் தரவில்லை, நமக்கு. அதற்கு, பல காரணம் சொல்லக்கூடும்--தஞ்சையின்மீது கழகக்காவலர்கள் தமது கவனத்தை அதிகம் செலுத்தவில்லை என்று முணுமுணுப்பதும் கேட்காமலில்லை, நமக்கு. நடைபெற்ற தேர்தலில் கழகச் சார்பில் நின்றோர் வாங்கிய ஓட்டுகளின் எண்ணிக்கை, சாதாரணமானதல்ல, என்கிற கணக்கும் புரியாமலில்லை நமக்கு. இந்தநிலை, மாறி, அடுத்த தேர்தலின்போது 'நாம்' வெற்றி காணும் சூழ்நிலை ஏற்பட வேண்டும்.

நல்லோரின் ஆசி இருக்கிறது—மக்கள் மன்றத்திலும் நம்மைப்பற்றிய நல்லெண்ணம் இருக்கிறது—உழைக்கும் தோழர்கள் - நாட்டை வாழ்விக்கும் கொள்கையும் நம்மிடம்தான் இருக்கிறது. இவைகளையெல்லாம் தக்க முறையில் பயன்படுத்தி, இப்போது முதல், நல்ல தொடர்பை மக்களிடம் ஒவ்வொரு கழகத்தோழரும் உண்டுபண்ணிக் கொள்ள வேண்டும். அதற்கான வகையில், மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோவும், அவருடன் ஒத்துழைத்த வரவேற்புக் குழுவினரும், மாவட்ட பிற நிர்வாகிகளும் தக்க திட்டம் தீட்டி பணியாற்ற வேண்டும்.

தஞ்சைமண்ணில், நல்ல விதைகளைத் தூவிவிட்டால், எளிதாகவும் விரைவிலும் பலன்காண முடியும். தூவினால், அறுவடை செய்யலாம் என்கிறநம்பிக்கையுள்ளது. துவக்கப்பட்ட இடங்களில் வளர்ந்திருக்கும் பயிர்களின் பாங்கும் கண்ணைப் பறிக்கிறது. எனவே, எங்கெங்கு கழகக் கொள்கைகள் பரவ வேண்டுமோ, அங்கெல்லாம் விதைத்திடும் வேலைகளை, மாநாட்டினை வெற்றிகரமாக, நடாத்திக் காட்டி, இருபதினாயிரம் ரூபாய் மிச்சத்தையும் காட்டி, ஏறுபோல் திரும்பிச் சென்றிருக்கும் ஒவ்வொரு கழகக் காளையரும் செய்ய வேண்டும்—"நஞ்செய்நாடு, நமது நாடு" எனும் புகழை நிறுவிடல் வேண்டும், என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்டுகள் இயக்கம் ஆகியவைகளின் இன்றையநிலையை எண்ணிடின், எதிர்காலம் யாருக்கு என்பது நன்கு விளங்கும்.

தஞ்சைத்தரணி, சாதாரணமானது அல்ல! அங்கு காவிரி பாய்கிறது, அதினின்றும் உண்டான பல நதிகள் ஓடுகின்றன, என்பது மட்டுமே பலருக்குத் தெரிந்திருக்க முடியுமே தவிர, ஆண்டு மாண்ட வீரப்பரம்பரையினரின் வெற்றிகளை உணர்த்தும் சின்னங்களும் உண்டு என்பதைப் பலர் அறியார்! முடிகொண்டான் என்று பெயர்கொண்ட ஆறு ஓடுகிறது--கடாரங்கொண்டான் எனும் ஊரும் உண்டு — புகாரும் 'தரங்கம்' பாடிடும் ஊரும், அரண் தாங்கியும், அழகான ஆலயங்களும், அமிழ்ந்துபோய்க் கொண்டிருக்கும் அரண்மனைகளும் நமது பழந்தமிழ்ப் புகழை எடுத்துக் காட்டுவதாகும்.

அவைகளையெல்லாம் ஒருகணம் எண்ணிடின், உள்ளம் எரிமலையாகும்! உணராத காரணத்தினாற்றான், தஞ்சை மாவட்டத்திலுள்ள பலர், இருளிலும், 'கொண்டதே கோலம்' எனும் போக்கிலும் உள்ளனர்—அந்த இருளைப் போக்கிடும் பணியினை, அங்குள்ள கழகத்தவர், அன்பு முறையால், கழகத்தின் கண்ணியம் கடமை கட்டுப்பாடு எனும் மூலமந்திரங்களின் துணைகொண்டு முயற்சிப்பார்களாயின் வெற்றிகிட்டும்! தாயகம், விடுதலை முரசு கொட்டும் நாள் விரைவில், எட்டும்!! ★

# இராணி இராசேந்திரா

அண்ணால்

மாடி வீட்டிலே ஏழை!—இதென்ன புலிக் குகையிலே பசு என்பது போலுள்ளதே! மாடி வீட்டிலே' எப்படி ஏழை இருக்கமுடியும், மாடி வீடானாலே அங்கு 'மவுசுகள்' பெற்றோர்தானே இருப்பர், கோடீசுவரர்களும் குபேரபுரியினரும் வாழத்தானே மாடி வீடுகளைக் கட்டிக்கொள்ளுகிறார்கள், என்றே எண்ணத் தோன்றும் எவருக்கும்.

ஏழு அடுக்குகள் கொண்ட மாடி வீடானாலும், அங்கே ஒரு ஏழை தோன்றினாள்; பட்டுப் பட்டாடைகளும், பணமும், அணிமணியும் பெட்டிகளில் குவிந்து இருந்தும், அவள் ஏழையாகவே இருந்தாள்; எனக்கேனிதெல்லாம், சாதாரண ஆடை ஒன்று போதும், உடம்பை மறைத்துக்கொள்ள பதினாறு முழத்தில் ஒரு புடவை. இரண்டு முழத்திலே ஒரு இரவிக்கைத் துணி; இது போதும் என்றாள்; பூரியும், சப்பாத்தியும், பேணியும், லாடும், வெள்ளித்தட்டும், அள்ளி வைக்க எடுபிடிகளும் இருந்தனர்; அவளோ, வயிறார ஏதாவது உணவு கிடைத்தால் போதும், அதைவைத்துச் சாப்பிட வெள்ளியேன்? பீங்கானே போதும் என்றாள்.

அவளையொத்த ஆரணங்குகள் அத்தைமகள், சிற்றப்பன் செல்வி போன்றோர், சிங்காரமான மாளிகையிலே தளுக்கும் குலுக்குமாக, மதுரசக்கிண்ணம் ஏந்தி. 'மச்சான் உன்னைப் பார்த்து, மயங்கிப்போனேன் நேத்து' என்று பாடிக்கிடந்தனர்! இவளோ, அந்தச் சமயங்களில், குடிசைகளே வீடாய் எரிமலையே வயிறாய், எலும்பும் தோலுமாய் நின்ற ஏழையர்தம் மத்தியில் போய், "நீங்கள் ஏனிப்படி இருக்கிறீர்கள்? ஏழைகளாய், கோழைகளாய் நீங்கள் இருக்கக் காரணம் என்ன? விதியென்பார் வீணர்! வெற்றுரையாம் அது! அறிவீனர் வகுத்த சதியென்பேன் நான்! அதனை முறியடித்து, தாய் நாட்டை மீட்டிட வாரீர்!" என்று பொதுப்பணி புரிந்தாள்.

டாடா, பிர்லா போன்ற சீமான்களைவிட மேலான குடும்பத்திலே பிறந்தவள்! சிற்றரசுக்கே உரிமையானவள்! சுதந்திரம் வருமுன் சோபிதத்தோடு விளங்கிய இந்திய சமஸ்தானங்களில் ஒன்றில் பிறந்தசெல்வி அவள். இராணிராஜேந்திர குமாரி என்பது அவள் பெயர். வீடு மட்டுமல்ல, அரண்மனைகளிருந்தன, அவளுக்கு. வெண்சாமரம் வீசிடத் தாதியரும், வெளியில் கிளம்பினால் குதிரை பூட்டிய கோச்சுகளும், பாதுகாத்து வர படையினரும், வாய் திறந்தால் வைரமும், கேட்டால் தங்கமும் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் ஏராளமிருந்தன, அந்த இளவரசிக்கு! எனினும், அவள் அவைகளைத் துச்சமென மதித்தாள் — சுதந்திரப் போருக்குத் தன்னை அர்ப்பணித்தாள்—ஏழைகளோடு ஏழையாய் வாழ விரும்பினாள் — புதியதொரு 'புத்தர்' போல விளங்கினாள்.

செட்டிநாட்டரசர் தன்னை ஒரு காங்கிரஸ்காரர் என்று இன்று சொல்லிக்கொள்கிறார் — இராமநாதபுரம் இராஜாவும், மைசூர் மன்னரும் தத்தமக்கு காங்கிரசின் மீதுள்ள பிரியத்தைப்பற்றி விவரிக்கிறார்கள்—நிலப்பிரபுக்கள் ஆலையரசர்கள், சமஸ்தானாதிபதிகள், யாவரும் இன்று தங்களைக் காங்கிரஸ்காரர்கள் எனக் கூறிக்கொள்வதே பெருமை என எண்ணுகின்றனர். காங்கிரசும் "இவர்கள் எல்லாம் எங்கள் கட்சிக்குள்!" என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகிறது.

இராணிராசேந்திரகுமாரி காங்கிரசுக்குத் தன்னை அர்ப்பணித்த நேரம் இப்படிப்பட்டதல்ல! உற்றாரும் உறவினரும், வெள்ளையர்தம் தாசர்களாயிருந்த நேரம். காந்தி அடிகளையும், காங்கிரஸ்காரர்களையும், 'நுழையாதே எமது எல்லைக்குள்!' என்று தடைபோட்டுவிட்டு, அதற்கான சன்னதைப் பெற, ஜரிகைக் குல்லாய்களைப் போட்டுக்கொண்டு, தங்கத்தாலான சாரட்டிலேறி, வைஸ்ராய் மாளிகையே, தஞ்சம் எனக் கிடந்த காலம் அது. அப்போது, இந்தப் பெண், அரண்மனையை விட்டு, ஏழைகள் கூடாரம் நோக்கிச் செல்வதென்றால்; சென்று, பிரிட்டிஷாரை எதிர்த்துப் பேசுவதென்றால்; உறவினர், என்ன கருதியிருப்பர்! உற்றாரெல்லாம் எப்படியெப்படி ஏசியிருப்பர்! மாடிவீடு இருந்தும், இந்த மண்டூகம் ஏனிப்படியெல்லாம் அலைகிறது-வசதியிருந்தும் இவளேன் வயிற்றுக்கில்லாததுகளுடன் போய்க் கிடக்கிறாள் — தேசமாமே தியாகமாமே—புத்தியில்லாதவள் — நமக்கேனிதெல்லாம் — நன்செயில்லையா, புன்செயில்லையா—இப்

படித்தானே கேலிக் கணைகளைத் தொடுப்பர்! வீரன் விடுக்கும் அம்புகளைக் கூடத் தாங்கிக்கொள்ளலாம், அவை உடலை மட்டுமே வருத்தும். ஆனால், வீணர் தொடுக்கும் கேலிக் கணைகள் இதயத்தைப் பிளந்து, குடையக்கூடியதன்றோ !!

மாளிகைகள் இருந்தன—மக்களின் மனமாளிகையே பெரிதென நினைத்தாள். வலம் வர எடுபிடிகளிருந்தனர், சமஸ்தானத்தில்; மக்களின் அன்பே மூல பலம் என எண்ணினாள். ஆள்வதற்கோர் சிம்மாசனம் இருந்தது; மக்கள் தம் மனமே எனக்குச்சிம்மாசனம் எனக் கருதினாள்; பராக்குக் கூறிடுவோரும், பல்லக்குத் தூக்கிகளும் ஏராளம் இருந்தனர், அவளோ மக்கள் மன்றம் 'வாழ்க இராணி!' என்று எழுப்பிடும் முழக்கமே, என் காதுகளுக்குக்கீதம் எனறு கருதினாள்; தங்க நகைகள் தரப் பலர் காத்துக் கிடந்தனர், மக்கள் தரும் மலர்ச் செண்டுகளிலே கிடைக்கும் மணம் இவைகளுக்கு ஏது என்றாள்; உறவினர்கள் உறுமினர், அவள் காதுகளில் மக்கள் எழுப்பிடும் வறுமைக் குரல் மட்டுமே கேட்டது; வீணர்கள், வம்பு பேசினர், 'தூ தூ' என அவைகளைத் தள்ளி ஒதுக்கினாள்; வாழத் தெரியாதவள, என்றனர், சிற்றரசுகள்—அவளோ, 'வீராங்கனை' என வாழ்த்தும் மக்கள் கூட்டத்தைக் கண்ணால் காட்டினாள்.

உப்பு அள்ளும் போர்—தனிப்பட்டோர் 'சத்தியாக்கிரகம்' —ஆகஸ்டு அறபபோர்—என்கின்ற ஒவ்வொன்றிலும் அவள் பங்கேற்றாள்! அரண்மனையிலே, தங்கக் கோப்பைகள் இருந்தன ஏராளம்; அவளோ, காராக்கிரகத்திலிருக்கும் கஞ்சிக் கலயத்தை ஏந்திச் சோற்றுக்குக் காத்துக் கிடந்தாள். அவளின் தியாகத்தைக் கண்டோர், மிகவும் சிக்கலான சமயத்தில் (1934-ல்) அவளை பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக ஆக்கி, அவள் கட்டளைப்படி நடந்தனர்! அந்த வீராங்கனைக்கு இரண்டு குழந்தைகள இருக்கின்றனவாம்—அந்த இரண்டுபேரும், அவள் சிறைச்சாலைகளிலேயிருந்தபோது பிறந்தவர்களாம்!!

நாட்டின் விடுதலைக் குரல் கிளம்பியபோது, எவரெவரையெல்லாம் அக்குரல் ஈர்த்தது, என்னென்ன தியாகங்களையெல்லாம் செய்யும்படி செய்தது, என்கிற பட்டியல், காங்கிரஸ் சரிதத்தில், மிகப் பெரிது. வக்கீல் வேலையை விட்டெறிந்தவர்கள், மாளிகைகளைக் காங்கிரசுக்குக் காணிக்கையாக்கியவர்கள், பள்ளிகளைவிட்டு அறப்போரில் குதித்தவர்கள், பட்டங்களை வீசியெறிந்தவர்கள், தூக்கு மேடை நோக்கிச் சென்றவர்கள், சொந்த நலன்களையெல்லாம் துறந்தவர்கள், செக்கிழுத்தவர்கள், செங்குருதியைச் சிந்தியவர்கள், சிறைச்சாலைகளை அறக்கோட்டமாக எண்ணியவர்கள், சித்ரவதைக்காளானவர்கள், ஏராளம் உண்டு காங்கிரசில். இராணி ராசேந்திர குமாரியின், வரலாறே, சுதந்திரக் குரல் எங்கெங்கிருந்தெல்லாம், எவரெவரையெல்லாம் இழுத்தது என்பதை விளக்கும்.

பெண், வீட்டைவிட்டு வெளியே கிளம்புவதே இந்த நாட்டில் அருமை! அதிலும், போக போக்கியங்களும், வாழ்வதற்கு வேண்டிய வசதிகளும் நிரம்பியஒரு அரசகுமாரி, இந்தளவுக்கு வந்தாள் எனின், இரண்டு குழந்தைகளைச் சிறைச்சாலைக்குள்ளே பெற்றெடுக்குமளவுக்கு நிலைமையிருந்தபோதும் நெஞ்சுரம் இழக்காமல் தொண்டு புரிந்தாள் எனின், சுதந்திரக்குரல் உண்டாக்கிய வேகமும் விடுதலைத் தாகமும் எவ்வளவு பெரிதென விளங்கும். விடுதலை புரி நாடும், ஒவ்வொரு வீரரும், உண்மையில் அன்று ஊற்றப்பட்ட சுதந்திர உணர்ச்சிக்கு, சிரம் வாழ்த்தவே வேண்டும்.

அப்படிப்பட்டஇராசேந்திரகுமாரி ஓரிரு மாதங்களுக்குமுன், ஒரு உபதேர்தலுக்கு நின்றாள்! பொதுத் தேர்தலிலே, பொன்னுள்ளம் கொண்ட இப் புனிதவதிக்கு இடமளித்திருக்க வேண்டுமேயென்பீர்கள் — இப்பேற்பட்டவர்களுக்கு இடமளித்து, தேர்ந்தெடுத்து, பொறுப்பில் வைக்கும் ஆர்வமா இருக்கிறது, இன்றைய காங்கிரசில். காங்கிரசின் எதிரிகளாய் இருந்தவர்களுக்குத்தானே இப்போதெல்லாம் இடம் கிடைக்கும்! இவள் தியாகம் செய்தவளாயிற்றே—தியாகிகளுக்கு கௌரவம் அளிக்கும் எண்ணமிருப்பின், காரைக்குடி சா. கணேசனை ஒதுக்கிவிட்டு, அந்த இடத்தை செட்டிநாட்டுச் சீமானுக்குக் கொடுப்பார்களா! அதுமட்டுமல்ல இராணி ராசேந்திரகுமாரி, இப்போது காங்கிரசிலே, இல்லை. என்ன? காங்கிரசுக்காக 'புத்தரான' அப்புண்ணியவதி காங்கிரசிலே இல்லையா, என்று திகைப்புடன் நீங்கள் கேட்பது தெரிகிறது மணக்கண்ணில். உண்மைதான், அவள், இப்போது காங்கிரசிலே இல்லை. ஏன், பொதுத் தேர்தலில், தன்னைநிற்க வைக்காததால், மனம் பொருமி, விலகி விட்டாளோ எனில், அதுவுமில்லை! பெரிய சிற்றரசையே, தேசவிடுதலைக்காக, சிறிதென மதித்த அந்தத் தியாகசேவகிக்கு, எம். எல். ஏ. பதவியா பெரிது? இரண்டு மூன்றாண்டுகளுக்கு முன்பே, அவள் காங்கிரசைக் கை கழுவி விட்டாள். காரணம், இப்படி எம். எல். ஏ.—மந்திரிப் பதவிகளே—முக்கியம் என்று காங்கிரசுக்குள் ஏற்பட்டுவிட்ட கன்றாவியைக்கண்டு, மனம் நொந்தே, அவள் காங்கிரசை விட்டாள்!! அப்பேற்பட்ட உத்தமி, ஒரு உபதேர்தலிலே, நிற்க நேர்ந்தது.

எந்தக் காங்கிரசே தனது வாழ்வின் மூச்சு என்றுகருதி வாழ்நாளெல்லாம் பாடுபட்டாளோ, அதே காங்கிரசை எதிர்த்து இந்த உபதேர்தலில் நின்றாள்.

காங்கிரசை எதிர்த்துத் தேர்தலில் ஈடுபட்டபோது, அம்மாதரசியின் மனதிலே, என்னென்ன எண்ணங்கள் எழுந்தனவோ—எத்தனை தடவைகள் கண்ணீரால் முகத்தைக் கழுவிக்கொண்டாளோ, நாமறியோம்! ஆனால், அவள் இந்த உபதேர்தலில் போட்டியிட முன்வந்ததுகூட, காங்கிரசுக்குப் பாடம் புகட்டவும், காங்கிரஸ் எப்படிப்பட்டகட்சியாகி விட்டதென்பதை மக்களுக்கு எடுத்து விளக்கவும்தான்!!

அவள் எதிர்த்துநின்ற, காங்கிரஸ் அபேட்சகர், சாதாரணமானவரல்ல. இங்கே 'காமராசர்' இருக்கிறாரல்லவா, நிரந்தரத்தலைவராகவும், நினைதப்படி நாட்டை ஆட்டிவைப்பவராகவும்! நேருவின் சொந்த மாகாணமான ஐக்கிய மாகாணத்திலே, 'காமராஜர்ராம்' அவர்!! மந்திரிகளை ஆக்கவும் அழிக்கவும் வல்லமை படைத்தவராம்—காங்கிரஸ் கட்சிக்குள்ளே அவர் வைத்ததுதான் சட்டமாம்—டில்லியிலே வாழும் பண்டிதபந்த் உட்பட்டப் பலரும் அவரது தயவில்தான் வாழவேண்டுமாம்,

ஆதனால் அவருக்கு "மந்திரிப் பிதா!" என்றொரு பட்டப் பெயரும் உண்டாம்—கடந்த மூன்றாண்டுகளாகக் காங்கிரஸ் கட்சியிலும்சரி, மாநில ஆட்சியிலும் சரி, அவர் விரலசைவே வேதமாம்—ஐக்கிய மாகாணத்துக்கு சம்பூர்ணானந்த் என்பவர்தான் இன்றைய முதலமைச்சர் என்றாலும், இவர் சொற்படிதான் எதுவும் நடக்குமாம். சுருங்கச் சொல்லின், எந்த மந்திரிசபையிலும் இடம் பெறும், 'பக்தவத்சலம்' இவர்! எதையும் ஆட்டிவைக்கும் திறன் படைத்த, ஐக்கிய மாகாணத்து 'காமராஜர்' இவர் !!

**கி. பி. குப்தா** எனும் திருநாமம் கொண்ட இவர் போன்றோரால்தான் காங்கிரஸ் சிரழிகிறது—எப்படியாவது பம்பரத்தை ஆட்டி வைக்கும் கயிற்றினைத் தம் வசமே வைத்துக் கொள்ள வேண்டுமெனும் ஆசையில் தலையாட்டும் ஒரு கும்பலைச் சேர்த்து வைத்துக் கொண்டு கொட்டமடிக்கிறார்கள்—தலையாட்டுவோர் தம்வசமிருந்து நழுவிவிடாதிருப்பதற்காக அவர்களுக்கு அரசாங்க சலுகைகளை அளிக்க ஆரம்பிக்கிறார்கள்—அதன் காரணமாக ஊழல் மலிகிறது, உறவினருக்கு உத்தியோகம் கொடுக்கும் சலுகைகள் அதிகமாகின்றன—அரசு கெடுகிறது—இப்படிப்பட்ட "கட்சி முதலாளிகள்" (Political Bosses) முதலில் அரசியல் வாழ்வை விட்டு அகற்றப்பட வேண்டும்—இவர் போன்றோரால்தான் கண்ணீர் விட்டு வளர்த்த காங்கிரஸ் விருட்சம் கெட்டு வருகிறது—எப்படியும் இந்த ஆளுக்குப் புத்தி போதிக்க வேண்டும் எனும் ஆவலில்தான், பிரஜா சோஷியலிஸ்டு கட்சியின் சார்பில் இராணி ராசேந்திரகுமாரி, போட்டியிட்டாள்! உப தேர்தலில் நின்றாள் !!

குப்தாவுக்கு, மற்ற மாகாணங்களில் இருந்தெல்லாம் படைகள் குவிந்தன மாகாண அமைச்சரவையையே ஆட்டி வைக்கிறவர் என்பதால், பணம்கொண்டுவந்துகொட்டப்பட்டது பெரியபெரிய கார்களும் 'ஜீப்'களும், காங்கிரஸ் கொடியுடன் வட்டமிடலாயின; மந்திரிகள் பேசினார்கள்; பெரிய மந்திரிகள் வந்தார்கள்; நேரு அறிக்கை விடுத்தார்; அவர் நின்ற தொகுதியும் சாதாரனமானதல்ல, காங்கிரசுக்கு அபரிமித செல்வாக்குள்ள இடமென்று கூறப்படும் பகுதியாகும். கேட்கவா, வேண்டும்! தேர்தல் பிரச்சாரம், ஒரு மகத்தான உற்சவமாக இருந்தது !!

இராணி ராசேந்திரகுமாரிதான், மாடிவீட்டு ஏழையாயிற்றே—அதனால், தன்னையும் தன் தியாகத்தையும் நம்பியே, தேர்தலில் இறங்கினாள். கார் கிடையாது அவளுக்கு; கால்கள் இரண்டும் தான் துணை. காங்கிரசுக்குச் செல்வாக்கு அதிகமுள்ள பகுதியம்மா, என்றார்கள், தோழர்கள்! அதனால் என்ன, இன்றுள்ள காங்கிரசை மக்கள் மதிக்கிறார்களா—என் தியாகத்தை மதிக்கிறார்களா என்று பார்த்துவிடுகிறேன், என்றாள். 205 கிராமங்களிருக்கின்றனவே? — என்றார்கள். எல்லாக் கிராமங்களுக்கும், **கால்நடையாகவே** போகப் போகிறேன், என்றாள். என் தியாகத்தை மக்கள் உணர்ந்தால் உணரட்டும், உணராவிடின் போகட்டும், நான் வளர்த்த காங்கிரசைக் கெடுக்கும் கெடுமதியாளர்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தவாவது இந்தத் தேர்தல் பயன்படட்டும் என்று போட்டியிட்டாள்.

**சென்ற இடங்களிலெல்லாம், அவளை வரவேற்றனர் மக்கள்.**

**வாழ்த்துப்பாக்கள் வழங்கினர்! காலைத் தொட்டுக் கும்பிட்டனர்!!**

**வீடு, வீடாகச் சென்றாள்—விபரத்தை எடுத்துரைத்தாள்!**

**கால் நடையாவே எங்கும் சுற்றினாள்.**

**காங்கிரசுக்கோ — கார்கள் ஏராளம்! கர்ச்சித்தோர், பலர்! படைகள், திரண்டன!!**

**தனியாகத் தன்னையும் தன் தியாகத்தையும் நம்பியே, அவள் நின்றாள்.**

முடிவு? **வென்றாள்** இராணி ராசேந்திரா! ஆட்சியையும், கட்சியையும் ஆட்டிப் படைக்குமளவுக்குச் செல்வாக்குப் பெற்றிருந்த குப்தா — **தோற்றார்**, 7000-வோட்டுகளுக்குமேல் குறைவாகப் பெற்றுத் தோற்றார்.

இராணி ராசேந்திரா, மாடிவீட்டு ஏழை! குப்தா, ஏழையாகஇருந்து மாடிவீடு பெற்றவர்!

அவள், தேசத்துக்காக, எல்லாவற்றையும் தியாகம் செய்தவள்.

இவரோ, தியாகம் செய்த கட்சியின் பெயரால், சுகவேட்டையாடுபவர்.

மக்கள் தியாகத்தை மதித்தார்கள்; நரிவேடத்தை அம்பலப்படுத்தினார்கள்.

இன்று நேருவின் மனதில் மாறாத வேதனையை உண்டாக்கியிருக்கும் பல காரணங்களில், இத்தேர்தலும் ஒன்றாகும்.

என்றும் உண்மைச்சேவை வெல்லும்— ஒருசில நாட்களுக்கு; பதவி மவுசும், படாடோபமும் ஆட்டம் போட்டாலும், தியாகமே வெல்லும், என்பதை உலகுக்கு உணர்த்தி விட்டாள் மாதரசி இராசேந்திரா! மாபெரும் காங்கிரஸ் என்று மார் தட்டுவோரே இத்தேர்தலின் விளைவால் இன்று மனங்கலங்கிக் கிடக்கின்றனராம் ஐக்கிய மாகாணத்தில். இந்த விபரங்களை யெல்லாம் 'இந்து' நிருபர், விபரமாகத் தந்துள்ளார்!!

தனக்கு உகந்த மணமகன் கிடைக்கும்வரை பெண் வருங்காலத்தைப் பற்றிச் சிந்திக்கிறாள்; தனக்கு மணப்பெண் கிடைக்கும்வரை ஆடவன் வருங்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதில்லை.